

# நெசவாளர் வாழ்வு ஒளி பெற....

## மாண்புமிகு முதல்வர்

உழவுக்கு அடுத்த மிகப் பெரிய தொழிலாக விளங்கும் கைத்தறித் தொழில் நம் தமிழகத்தில் ஏறக் குறைய 10 லட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளித்து வருகிறது. நாட்டின் துணித் தேவையில் மூன்றில் ஒரு பங்கினை ஈடு செய்து வரும் இணையற்ற தொழில் கைத்தறித்தொழில்.

இலட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளித்து வேலை வாய்ப்பை வழங்கிவந்த இந்தத் தொழிலுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய நெருக்கடி நிலையினைப் போக்கிடவும், கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு ஒரு புதிய வழி காணவும் 1954-ஆம் ஆண்டு அகில இந்திய கைத்தறி வாரவிழா கொண்டாடப்பட்டது. ஆண்டு தோறும் இது தொடரப்பட்டு பொது மக்களின் பேராதரவைப் பெற்று, கண்காட்சியில் இலட்சக்கணக்கான ரூபாய்களுக்குக் கைத்தறித் துணிகளும் விற்பனையாயின. பொது மக்களின் பேராதரவு காரணமாய், ஏழு நாட்கள் என முதலில் கொண்டாடப்பட்டு வந்த இவ்விழா பின்னர் படிப் படியாய் இருவாரம், மூன்று வாரம் என விரிவுபெற்று இன்று வெள்ளிவிழா காணுகிறது என்று அறியும் போது, இந்தக் கண்காட்சிகளுக்கும், நெசவாளர் களுக்கும், கைத்தறியாடைகளுக்கும் பொது மக்கள் நல்கி வரும் மகத்தான ஆதரவினை நன்கு அறிய முடிகிறது.

இந்த நல்லாதரவு பல்கிப் பெருக வேண்டும். நெசவாளர்கள் வாழ்வு ஒளி மிகுந்து விளங்க வேண்டும். கைத்தறியாடைகள் பாரெங்கும் புகழ் பரப்ப வேண்டும். வெள்ளி விழாக் கைத்தறிக் கண் காட்சி எல்லா வெற்றிகளையும் காணவேண்டும் என எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.


தமிழரசு

மலர்.9 16-4-1979 இதழ்.20



# கைத்தறி

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்
திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்

மக்களின் மான உணர்வுக்கு எடுத்துக்காட்டு ஆடை. அந்த ஆடையும் நெசவாளியின் கைத் திறனால் உருவான கலை நய மிக்க கற்பனை உருவாக்கம். விழா நாட்களில் பெறுபவை ஆடைதான். அந்த இடத்தை-கைத்தறிக்கு உரிய இடத்தைத் தருவதற்குத் தமிழக மக்கள் என்றுமே தயங்கியது இல்லை-மறந்தது இல்லை.

கைத்தறிக் கண்காட்சி வெள்ளி விழா காணும் இந்த நாளில் கைத்தறியின் பல்வேறு கூறுகளைப் பற்றி எண்ணிப் பார்ப்பது சாலவும் நன்மை பயக்கும் என்றே எண்ணுகிறேன்.

புரட்சித் தலைவரின் அரசு தமிழகத்தில் அமைந்த பிறகு, கைத்தறித் தொழில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம்- கைத்தறியாளர்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையேயல்ல.

கைத்தறித்துறையில் உரிய- தீவிர வளர்ச்சிக்கென்று தனியாக ஒரு அமைச்சரை - 30 ஆண்டுக் காலமாக இல்லாமல் - நியமித்தது, இத்தொழிலின் வளர்ச்சியின்பால் புரட்சித் தலைவருக்குள்ள அளவற்ற ஆர்வத்தையும், தீவிரத்தையும் எடுத்துக்காட்டும் நிகழ்ச்சியாகும். கைத்தறித்துறைக்கு இந்த அரசு ஆற்றிய முதல் பெரும் பணியாகும் இது.

ஏற்றுமதித் துறையில் தீவிர கவனம், புதுப்புது மாதிரிகளில், கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க வகையில் கைத்தறியில் உற்பத்தி, கைத்தறியின் சிறந்த சாதனையான, கைத்தறி பாலியஸ்டர், தலைவர்களின் பிறந்த நாள் நினைவாகச் சிறப்புத் தள்ளுபடி அளித்தது; அளிப்பது, கூட்டுறவுத்துறைக்கு வெளியே தனியாரிடம் அல்லல்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்த நெசவாளர்களுக்குத் தொழிலியல் சங்கங்கள், . கூட்டுறவுத் துறையில் தயாராகும் உற்பத்திகளைக் கொள்முதல் செய்வதில் புதிய கொள்முதல் திட்டம், இதன் விளைவாக, சங்கங்கள் தங்களுடைய உற்பத்தியை ஒழுங்குபடுத்திக்கொள்வதோடு, விற்பனையாகும் இரகங்களை மட்டுமே உற்பத்தி செய்யவும், நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலை வாய்ப்பும் கிடைக்கும். வாய்ப்பு, உற்பத்திக்கு மூலப் பொருளான நூல் பட்டு, சரிகை, சாயப் பொருள் ஆகியவைகளின் சீரான விநியோகத்திற்கு வழிவகைகள்.

இப்படிப் பல்வேறுபட்ட தீவிர திட்டங்களின் பயனாய் - கைத்தறியில் இன்று உற்பத்தி அதிகரித்திருப்பதோடு, விற்பனையும் பெருமைப்படத்தக்க அளவு உயர்ந்துள்ளது.

1977 - 78-ஆம் கூட்டுறவு ஆண்டில் கோ-ஆப்டெக்சின் விற்பனை ரூ. 23 கோடியாகும். 1978 -79-ஆம் ஆண்டுக் குறியளவு ரூ. 30 கோடியாகும். வரும் ஜூன் மாதத்திற்குள் இந்தக் குறியளவு நிறைவேற்றப்படும் என்பதைத் தமிழக மக்கள் அண்மைக் காலத்தில் கைத்தறியின்பால் காட்டும் அளவற்ற ஆர்வத்தைக்கொண்டு உறுதியாகச் சொல்லலாம்.

கடந்த தீபாவளிக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ. 12 கோடி குறியளவு நிறைவேற்றப்பட்டு, அதற்கு மேலும் ரூ.1.50 கோடிக்குக் கைத்தறித் துணிகள் விற்பனையாயின என்றால், தமிழக மக்கள் இத்தொழிலின் வளர்ச்சியிலும், நெசவாளர்களின் நல்





வாழ்விலும் கொண்டுள்ள ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தெளிவாக அறியலாம்.

வாங்குவோருக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கத் தக்கவகையில் சிறப்பு விழா நாட்களில் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. இதன் காரணமாய், விற்பனை பெருமளவில் கூடுகிறது. அதனால் நெசவாளிக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு ஏற்பட வழிவகை பிறக்கிறது.

கைத்தறித் துணிகள் என்றால், ஒரே மாதிரியாய் இருக்கும்; ரகங்கள் இருக்காது; புதிய மாதிரிகள் கிடையாது என்ற நிலை தவிர்க்கப்பட்டு, இன்று கைத்தறியில் வண்ண வண்ண ஆடைகள் உருவாகின்றன. இதற்குக் காரணம் மதுரையில் துவக்கப்பட்ட வண்ண அமைப்பு நிலையம் உருவாக்கிய 300 மாதிரிகளைச் சங்கங்கள் ஏற்று, உற்பத்தி செய்ததுதான்.

கோவை, சேலம் ஆகிய இரண்டு ஊர்களில் அமைக்கப்படவிருக்கும் வண்ண அமைப்பு நிலையங்களால், மக்களுக்கு வண்ணத்துப் பூச்சியின் வண்ணங்கள்யொத்த, வடிவழகாம் வானவில்லின் நிறங்களைக் கொண்ட கைத்தறியாடைகள் தமிழக மக்களுக்குக் கிடைக்கவிருக்கின்றன என்பதை இக்கைத்தறி வெள்ளி விழா நாளில் மகிழ்ச்சிகரமான செய்தியாகத் தமிழக மக்களுக்கு அன்புடன் உரித்தாக்குகிறேன்.

கைத்தறி ஏற்றுமதித் துறையில் தீவிர கவனம் செலுத்தி வருவதன் விளைவாக 1976-ல் ரூ. 48 இலட்சமாக இருந்து ஏற்றுமதி 1978-ல் ரூ. 156 இலட்சமாக உயர்ந்துள்ளதையும், அடுத்து ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற அயல் நாடுகளுக்கு ரூ. 2 கோடியளவுக்கு ஆர்டர்கள் கைவசம் உள்ளன என்பதையும் அந்த ஆர்டர்கள் முறையாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் தமிழக மக்களுக்கு தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

கரூர், குறிஞ்சிப்பாடி, மதுரை, ஈரோடு, சேலம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள், கூட்டுறவுத் துறைக்குள் கொண்டு வரப்படும். தறிகள் எண்ணிக்கையை உயர்த்த எடுத்துள்ள நடவடிக்கைகள் மூலப் பொருள் வழங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்தவும், கதிர்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்க மேற்கொண்டு ஏற்பாடுகள், சரிகை உற்பத்தி நிலையம் சரிகையை, இடைத்தரகர் இன்றி நேரடியாகக் கொள்முதல் செய்து பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அமைத்துள்ள பட்டு சரிகைக் கொள்முதல் குழு, கைத்தறி ஆடைகளைப் பதனிட மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் ஆகிய சிறந்த சீரிய பணிகளின் காரணமாய் கைத்தறித்துறை வரும் காலத்தில் சிறந்து செழித்து வளர, வாய்ப்புகள் பிரகாசமாய், உள்ளன என்பதைக் கைத்தறித் துறையின் அமைச்சர் என்றவகையில் தமிழக மக்களுக்குத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தகைய சீரிய திட்டங்களின் விளைவாய் உற்பத்தியாகிற ஆடைகளைத் தமிழக மக்கள்-இந்த நாட்டு மக்கள்-பெருமளவில் வாங்கினால்தான் திட்டங்களின் பலன் நெசவாளியைப் போய்ச் சேரும். அந்த நெசவா



ளர்களுக்குத் தொடர்ந்த வேலை வாய்ப்பு உண்டு, அவருடைய இல்லத்தில் ஒளி ஏற்படும், வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும்.

காலத்தால் இற்று விழாத விழாக்கள் -தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்த விழாக்கள் தமிழ்நாட்டில் எத்தனையோ உண்டு.

அந்த வகையில் கால் நூற்றாண்டுக்கு முன்பு இந்த நாடு கண்ட விழா கைத்தறி விழா. கலை நயமிக்க, வரலாற்று சிறப்பு மிக்க கைத்தறிக்கு ஓர் ஊறு நேர்ந்தபோது எடுக்கப்பட்ட இந்த விழா இன்று வெள்ளி விழா காணுகிறது என்றால்இந்த நாட்டுப் பெருங்குடி மக்கள் கைத்தறிக்கும், இந்தக் கைத்தறி விழாவினுக்கும், கைத்தறியாளர்களுக்கும் அளித்து வரும் பேராதரவினை நெசவாளர் பெருங்குடி மக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைத்துப் போற்றுவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கைத்தறி துணிகளை நாம் ஏராளமாக வாங்குவதன் மூலம் கைத்தறி நெசவாளர்கள் குடும்பம் நிம்மதியாக வாழமுடியும்.

—முதல்வர் திரு. எம். ஜி. ஆர்.

மூத்த மொழி தமிழ்போல், மூத்த தொழில் கைத்தறி ஆகும்.

அந்தக் கைத்தறிக்கு இன்று வெள்ளி விழா!

இந்த விழாவினை நெசவாளர்கள் மட்டுமல்ல இந்த நாட்டு மக்களும் உற்சாகத்துடன் கொண்டாட வேண்டும். அந்த உற்சாகம் பெருமளவில் கைத்தறியாடைகளை வாங்குவதில் வெளிப்பட வேண்டும் என்ற விளைவினையே இந்த நல்ல நாளில் என் இதயங்கனிந்த வேண்டுகோளாகத் தமிழ் மக்கள் முன்னே வைக்கிறேன்.

கந்தை ஆகினும் கசக்கிக் கட்டு.

—ஔவையார்.





# ஜரிகை

காஞ்சிபுரத்தில் 16 பட்டுக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களும் ஆரணியில் 8 பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் மட்டும் சுமார் 5,500 பட்டுத் தறிகள் நெய்கின்றன.

* * *

| மூலப்பொருள்கள் | மாதாந்திர தேவை |
|---|---|
| கோரா பட்டு | 8,000 கிலோ |
| சரிகை | 2,600 மார்க்குகள் |

இம்மூலப் பொருள்களின் மொத்த மதிப்பு மாதத்திற்குச் சுமார் 30 இலட்சம்.

* * *

மாதந்தோறும் காஞ்சிபுரம், ஆரணிக்குத் தேவைப்படுகின்ற மொத்த சரிகையினுடைய அளவு 2500 மார்க்குகள் ஆகும். தமிழ்நாடு அரசு நிறுவனமாகிய சரிகை தொழிற்சாலை மாதம் ஒன்றுக்கு 200 மார்க்குகள் சரிகை மட்டும் உற்பத்தி செய்கிறது.

கைத்தறி வளர்ச்சிக்கு 6 தீவிர நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 6 ஆயிரம் நெசவாளர்கள் வேலை பெற்று உள்ளனர். மேலும் 2 ஆண்டுகளில் 22 ஆயிரம் நெசவாளர்களுக்கு வேலை தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் தெரிவித்தார்கள்.




# கைத்தறிப் பெருமை காலத்தால் உயர்க!



ஆண்டு புதியது அனைத்தும் புதியன!
நீண்ட காலங்கள் நிலைத்து நிற்பன!
தோன்றும் சிறப்புகள் தொடர்ந்து வருவன!
புவனம் சிறக்கவே புத்தாண்டு வந்தது!
பாரத பூமி பாரங்கள் நீங்கி
இனியவாழ் வெய்தி இயங்குக பலநாள்!
உழைப்போர் வாழ்க்கையில் உயர்ந்தே ஓங்குக!
களைப்பில் லாமல் கனவுகள் பலிக்க!
ஏருழு வோர்க்கு இன்பமே நிறைக!
விசைத்தொழி லாளரும் வியப்புற வாழ்க!
இத்தகு ஆண்டில் எல்லா நாள்களும்
தத்துவச் செயல்முறை தழைத்தினி தோங்குக!
கைத்தறித் தொழிலைக் கண்போற் காத்து
சரித்திரம் படைத்த தாய்த்தொழில் என்று
போற்றிப் புகழ்ந்து பொன்னென வளர்த்து
கைநெச வாளர் கவலையைத் தீர்க்கும்
அரசின் முயற்சி அனைத்தும் வெல்க!
மானங் காக்க மாண்புறு துணிகளை
கைநெச வாளர் கனிவுடன் தந்தனர்;
அன்னவர் வாழ்வினை அரசு காப்பது,
தென்னவர் அனைவரும் திரண்டுமுன் னேறி
கைகொடுத் தேதும் கருணையைக் காட்டுக!
புத்தாண்டு பொலிக! புதியன வளர்க!
கைத்தறிப் பெருமை காலத்தால் உயர்க!



—அரசவைக் கவிஞர்
கண்ணதாசன்







# கைத்தறியில் மறுமலர்ச்சி

திரு. வி. சங்கரசுப்பையன், ஐ. ஏ. எஸ்.
இயக்குனர், கைத்தறி, ஜவுளித்துறை, சென்னை.

கைத்தறித் தொழில் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய அமைப்புச்சாரத் தொழில். இதில் சுமார் 5.56 லட்சம் தறிகள் உள்ளன. 10 லட்சம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்புக்கிடைக்கிறது. ஆண்டிற்கு ரூ. 150 கோடி மதிப்புள்ள துணிவகைகளைக் கைத்தறிகள் உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவுஇயக்கம்தற்போது செல்வாக்குப் பெற்று வளர்ந்துகொண்டிருக்கிறது. தற்போது கைத்தறி நெசவாளர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் கூட்டுறவு அமைப்புக்களின் கீழ் வந்துள்ளனர்.

கைத்தறித்தொழிலைச் செழிப்படையச் செய்வதற்கும், வளர்ப்பதற்காகவும், ஓரே சீராகவும், ஸ்திரமாகவும் அபிவிருத்தி அடைவதற்கான தொழில் உள் கட்டமைப்புக்களை உருவாக்கவும், தமிழ்நாடு அரசு கூட்டுறவு/அரசுத் தொகுதிகளில் தொழிற்கூடங்களை அல்லது நிறுவனங்களை அமைத்துள்ளது. கூட்டுறவுத் துறையில் 12 நூற்பு ஆலைகள் உள்ளன. இவை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுகளுக்கு நியாய விலையில் நூலை வழங்கி வருகின்றன. கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும், டையீடில்லா மாத வருவாய்க்கு வகை செய்யவும் 946 பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கைத்தறித்துணிகளுக்குமெருகேற்ற தமிழ்நாடு கூட்டுறவுச் செயற்பாங்கு நிலையம் பணியாற்றி வருகிறது.

''கோ-ஆப்டெக்ஸ்'' கைத்தறித் துணி வகைகள் விற்பனை வளர்ச்சிக்கும் விற்பனைக்கான ஆதரவு தருவதற்கும் பணியாற்றுகிறது. தமிழ்நாடு கைத்தறி நிதி, மற்றும் வர்த்தக கார்ப்பரேஷன் நிறுவனம், கூட்டுறவு சாராத கைத்தறி நெசவாளர்களுக்கு உதவிகளை அளித்து வருகிறது. இந்த அமைப்புக்களும், நிறுவனங்களும் அரசாங்கத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்துகின்றன. கைத்தறியை வர்த்தக அடிப்படையில் வளர்ப்பது தான் இந்த அமைப்புக்களின் முக்கிய நோக்கம்.

1935-ம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுசங்கம் ஒருநிறுவனமாக அமைக்கப்பட்டது. கைத்தறி தொழிலை வர்த்தக அடிப்படையில் அமைக்கவும், கைத்தறித்துணி வகைகளுக்கான சந்தைகளைக் கண்டுபிடித்துஅவற்றை அபிவிருத்தி செய்யவும், மூலப்பொருளான நூலை விநியோகிக்கவும், துணியைக் கொள்முதல் செய்து விற்கவும் இந்த நிறுவனம் உருவாயிற்று. 946 பிரதம கூட்டுறவுச் சங்கங்களையும் சார்ந்த இரண்டு லட்சத்து ஏழாயிரம் நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் 23 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிவகைகளை (ஏறத்தாழ 50 சதவீதத்தை) ''கோ-ஆப்-டெக்ஸ்'' கொள்முதல் செய்து நாடு முழுவதும் பரவிக் கிடக்கும் தனது 390 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் விற்று வருகிறது. நாட்டின் மிகப் பெரிய கைத்தறி விற்பனை அமைப்புகளில் ஒன்றாக அது உருவாகி வருகிறது. தற்போது ஆண்டிற்கு ஏறத்தாழ 23 கோடி ரூபாய்க்கு விற்பனை நடத்து வருகிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டிற்கு ரூ. 43 கோடி அளவிற்கு உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும் என்ற குறிக்கோளுடன் கோ-ஆப்-டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுசங்கங்களின்



துணி வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ''கோ-ஆப்-டெக்ஸ் இன்டர்நேஷனல்'' என்ற துணை அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இது ஏற்றுமதி அபிவிருத்தியைமட்டுமே கவனித்து வருகிறது. 1977-ல் இந்த அமைப்பு ஏற்றுமதி சந்தையில் புகுந்தது. அடுத்த 5 ஆண்டுகளில் ஏற்றுமதியை 10 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை ''கோ-ஆப்-டெக்ஸ்'' பிரதம சங்கங்களுக்கு பருத்தி நூலை மட்டுமே வழங்கி வந்தது. கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான எல்லா மூலப் பொருட்களையும் வழங்குவதற்காக ''மூலப்பொருட்கள் வங்கி'' நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவில் இடம் பெறும் கைத்தறி நெசவாளருக்குத் தேவையான சாய வகைகள், ரசாயனப் பொருட்கள் உட்பட எல்லா வகையான மூலப் பொருட்களையும் இந்த வங்கி விநியோகிக்கும். நெசவாளர்களுக்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள்கூறவும், புதியரகங்களை உருவாக்கவும், ஆறு மாதிரிகள் உருவாக்கும் நிலையங்கள் அமைக்கப்படும். புதுரகத் துணிகளை நெய்வதிலும், புதுக்கருவிகளைப்பயன்படுத்துவதிலும், நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

சந்தைகள் குறித்துத் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக தனியானதொரு ஆராய்ச்சிப் பிரிவை அமைக்க ''கோ-ஆப்-டெக்ஸ்'' திட்டம் தீட்டியுள்ளது. இதில் தகுதி வாய்ந்த வல்லுனர்களும், ஆய்வாளர்களும் இடம் பெறுவர். ''கோ-ஆப்-டெக்ஸ்'' கைத்தறித் துணிகள் உற்பத்தியை அதிகரிக்கவும், விற்பனையைப் பெருக்கவும், உற்பத்தியைப் பல வகைகளில் பரவலாக்கவும், உரிய காலத்தில் கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து கூட்டுறவுத் துறை நெசவாளர்களுக்குத் தொடர்ந்துவேலை வாய்ப்பு அளிக்கவும், முறையான நடவடிக்கைகளை எடுக்க இந்த ஆராய்ச்சிப் பிரிவு உதவும்.

மத்திய அரசாங்க கைத்தறி அபிவிருத்திற்கான நான்கு தீவிரத்திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி திட்டங்களையும் ரூ.463லட்சம் முதலீட்டில் தொடங்கியுள்ளது. கைத்தறிகள் பற்றி ஆராய்ந்த சிவராமன் கமிட்டி தெரிவித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இத்திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்கு எல்லாவிதமான தொழில் உள் கட்டமைப்புக்களையும் உருவாக்கித்தர வேண்டும்என்பது சிவராமன் கமிட்டியின் பரிந்துரை. நூல் தறிகள், கடன் வசதிகள், விற்பனை ஆதரவு ஆகிய அனைத்தும் ஒரு சேர நெசவாளருக்கு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. 1980—81க்கு முன்னர் இத்திட்டத்தின் கீழ் 22,000 தறிகள்வந்துவிடும். அதற்குப் பிறகு திட்டம் கூட்டுறவு அபிவிருத்தி திட்டமாக திருத்தியமைக்கப்படும்.

தற்போது சொந்தத்தறியின்றி கூலிக்குநெசவு செய்துகொண்டுள்ள 40,000 பேருக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும், ஆறாவது திட்டக் காலத்தில் கூட்டுறவு அமைப்புக்களின் கீழ் 3 லட்சம கைத்தறி நெசவாளர்களைக் கொண்டு வரவும் கைத்தறி நெசவாளர் தொழில் கூட்டுறவு சங்கங்களை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இது அரசாங்கம் எடுத்துள்ள மற்றொரு முக்கிய நடவடிக்கை.

12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும், 3.15 லட்சம் கதிர்களுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை உற்பத்தி செய்யும் நூல் கோ-ஆப்-டெக்சின் 19 நூல் விற்பனை நிலையங்கள் மூலும் 946 பிரதம கூட்டுறவுகளுக்கும விநியோகிக்கப்படுகிறது. தொடர்ந்து நூல் வழங்கப் படுவதால், பிரதம சங்கங்களுக்கு இடையீடில்லா மூலப் பொருட்கள் விநியோகத்திற்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. பட்டு நெசவாளர்களுக்குத் தரமான தங்க. செரிகை கிடைக்க வேண்டும் என்பதற்கான, மத்திய கொள்முதல் கமிட்டியொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கமிட்டி, பட்டு செரிகையைக் கொள்முதல் செய்து, பட்டு நெசவாளர் கூட்டுறவுகளுக்கு விநியோகித்து வருகிறது காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு செரிகைத் தொழில் கூட உற்பத்தியையும் இந்த மத்திய கமிட்டி தான் பெற்று விநியோகிக்கிறது. ரூ. 92 லட்சம் முதலீட்டில் 8 நவீன சாயக்கூடங்கள் நிறுவப்படும்.

கோ—ஆப்—டெக்ஸி லிருந்துபிரிக்கப்பட்டு 1973ல் ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவுசெயற்பாங்குநிலையம் அமைக்கப்பட்டது. தற்போது மாதம் 5 லட்சம் மீட்டர் துணியை இந் நிலையம் மெருகேற்றல், சாயமிடல், போன்ற பணிகளைச் செய்து வருகிறது. இதை மாதம் 10 லட்சம் மீட்டர் துணி அளவிற்கு உயர்த்த விரிவாக்கம் செய்யப்பட்டு வருகிறது. பயபாயில் ''பெட்ரோபில்ஸ்'' என்ற கூட்டுறவுகளில் கூட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, கூட்டுறவுகள் பாலிஸ்டர் கலந்த துணிகள் உற்பத்தியைப் படிப்படியாக மேற்கொண்டு வருகின்றன. சொக்காய்கள், புடவைகள், மற்றும் உடுப்புகளுக்கான துணிவகைகள், பாலியஸ்டர் கலந்து தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டன. இவற்றிற்கு சந்தைகளில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. பொது மக்கள் பாலியஸ்டர் கலந்த துணிகளுக்கு நல்லாதரவு தந்து வருவதால், கூட்டுறவில்இடம்பெற்றுள்ள சுமார் 3000 கைத்தறிகளை பாலியஸ்டர் கலந்த துணி உற்பத்தியில் ஈடுபடுத்துவது என உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் தற்போது செயற்கை இழை கலந்த நூலை செயற்பதனம் செய்யும் நிலையம் எதுவும் இல்லை. ஈரோட்டில உள்ள செயற்பதன நிலையத்திலேயே, செயற்கை இழை கலந்த நூலையும் சாயமிட்டு மெருகேற்றும் பிரிவு அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 31 லட்சம் ரூபாய் செலவில் இந்தப் பிரிவு அமையும்.

தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வர்த்தக நிறுவனம் 1964-ல் அமைக்கப்பட்டது. கூட்டுறவு சாராத கைத்தறி நெசவாளர்களுக்கு நிதி வசதி செய்வதற்காக இந்த நிறுவனம் உருவாயிற்று. இதுவரை இந்நிறுவனம் ரூ. 16.59 கோடி நிதியுதவி அளித்துள்ளது. கூட்டுறவு சாராத நெசவாளர்களுக்காக தொழில் உள்கட்டமைப்புக்களை உருவாக்கும் திட்டத்திற்கும் நிதி உதவி அளிக்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது.

1978 ஆகஸ்டு மத்திய அரசாங்கம் அறிவித்த ''ஜவுளி அறிக்கையின்'' படி ஜவுளி ஆலைகள், விசைத் தறிகள் ஆகியவற்றின் உற்பத்தித் திறன் தற்போது உள்ள அளவிற்கு முடக்கப்படும். இனித்தேவைப்படும் ஜவுளி ரகங்கள் அனைத்தையும் கைத்தறி மூலமே நிறைவேற வேண்டும். ஏற்றுமதிக்குக்கூட கைத்தறிகளைத் தான் சார்ந்திருக்க வேண்டும். சிலரகத் துணிகளை கைத்தறிக்கே பிரத்யேகமாக ஒதுக்கும் கொள்கை உருப்படியாக, அமுல்படுத்தப்படும் என கொள்கை வலியுறுத்துகிறது. நாட்டில் உடைத்தேவைகளை நிறைவேற்றுவதில், கைத்தறி ஜவுளி விசைத்தறித் துறைக்கு உறுதுணையாக அமையும்.

மூலப் பொருட்கள் முறையாகக் கிடைக்க உத்திரவாதம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி, புது மாதிரிகளைப் புகுத்தும் நடவடிக்கைகள், கைத்தறித் துணிகளின் நிறம், தரம், பளபளப்பு ஆகியவற்றில் முன்னேற்றம்; ஆகிய பல்வேறு நடவடிக்கைகளால் பொதுமக்கள் கைத்தறித் துணிகளை விரும்பி ஆர்வத்துடன் வாங்கிவருகிறார்கள். தொடர்ந்து ஆதரவு தருவார்கள் தமிழ்நாடு அரசு எடுத்துள்ள பல்வேறு, வளர்ச்சித் திட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் கைத்தொழில், வலுவாக காலூன்றி செழித்து வளரப் பெரிதும் உதவும். மக்களது உடுப்புத் தேவைகளைப்பூர்த்தி செய்து, நெசவாளர்களில் நலிந்த பிரிவினருக்கு வாழ்வு தருவது ஆகிய இரட்டைக் குறிக்கோள்களை கைத்தறித் துறை தொடர்ந்து நிறைவேற்றி வரும்.





# கைத்தறி-நிதி வர்த்தகக் கழகம்

தமிழ் நாட்டில் விவசாய தொழிலுக்கு அடுத்து பெருமளவில் வேலை வாய்ப்பை அளித்து வருவது கைத்தறி தொழிலாகும். இத்தொழிலால் நேரிடையாகச் சுமார் 30 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்றது.

தமிழகத்தில் 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. அவற்றில் 2.07 இலட்சம் கூட்டுறவுத்துறையிலும், மிகுதி 3.49 இலட்சம் தறிகள் தனியார் துறையிலும் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவுத்துறையின் கீழ் இயங்கும் தறிகளுக்குத் தேவையான நிதி வசதி, கச்சாப் பொருட்கள் முதலியன பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படுகிறது. ஆனால், தனியார் துறையில் இயங்கி வரும் தறிகளுக்குத் தேவையான நிதி வசதியை முன்பு வர்த்தக வங்கிகளும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், தனி நபர்களுமே வழங்கி வந்தனர். அத்தகைய தறிகளுக்கும் தேவைப்படும் நிதி வசதி, கச்சாப் பொருட்கள் முதலியவற்றினை நல்லெண்ணத்துடன் அதற்கென்று ஒரு தனி நிதிக்கழகம் அமைக்க வேண்டுமென்று மாநில அரசு முடிவெடுத்தது. இதனைச் செயல்படுத்தும் வகையில் 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு கைத்தறி மற்றும் வர்த்தகக் கழகம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து தோற்றுவிக்கப்பட்டது.

இக்கழகத்தின் முக்கிய நோக்கம், தனியார் துறையில் இயங்கும் தறிகளுக்குத் தேவையான நிதி உதவி அளித்து கைத்தறித் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதேயாகும். தற்சமயம் 6,131 பங்குதாரர்களைக் கொண்டுள்ள இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாகிய ரூ. 78.18 இலட்சத்தில் ரூ. 35 இலட்சம் மாநில அரசின் பங்காகும். இக்கழகம் சிறந்த முறையில் இயங்குவதற்குத் தேவைப்படும் நிதியை டெபாசிட்டாகவும் கடனாகவும் பெறுவதற்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

**திரு. கே. கனகசுந்தரம்**
**நிர்வாக இயக்குநர்**
**தமிழ்நாடு கைத்தறி நிதி**
**மற்றும் வர்த்தகக் கழகம்**

தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வர்த்தகக் கழகம் தற்சமயம் கைத்தறி, விசைத்தறி மற்றும் பனியன் தொழில் முதலியவைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்கள் வாங்கவும், துணி உற்பத்தி செய்தல், துணிகளைப் பக்குவப்படுத்துதல், விற்பனை செய்தல் ஆகிய இனங்களுக்குத் தேவையான நிதி உதவியைத் தனி நபர்கள் மற்றும் வீடு, நிலம் போன்ற தகுந்த பிணையங்களின் பேரில் வழங்கி வருகிறது.

நெசவாளர்கள், மாஸ்டர் வீவர்கள், கூட்டுநிறுவனம் ஆகியவைகள் இக்கழகத்தில் கடன் வசதி பெறத் தகுதி உடையவராவர். பங்குதாரர்களின் சௌகரியத்தை முன்னிட்டு சென்னை, சேலம், மதுரை, கோயம்புத்தூர், கும்பகோணம் ஆகிய இடங்களில் கிளை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கழகம் துவக்கப்பட்டது முதல் இதுநாள் வரை ரூ. 1630.41 இலட்சம் பங்குதாரர்களுக்குக்கடன் உதவி அளித்துள்ளது. இது கைத்தறித் தொழிலுக்கு தேவையான மொத்த நிதி வசதிகள் ஒரு சிறிய அளவினதாயிருப்பினும் கணிசமான கடன் பெறுபவர்களில் பெரும்பான்மையினர் ரூ. 5,000-க்கும் குறைவாகக் கடன் பெறுபவர்களாக உள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறும் வகையில் ரூ. 1,000 வரையிலான கடன்கள் பேரில் 12 சதவிகிதமும், ரூ. 1000 முதல் ரூ. 5,000 வரையிலான கடன்கள் பேரில் 14 சதவிகிதமும் சலுகை முறையில் வட்டி வசூலிக்கப்பட்டு வருகிறது. இக்கழ்கம் வங்கியிடமிருந்து தான் பெறும் ரொக்கக்கடனுக்கு 14 சதவிகிதம் வட்டி செலுத்தியபோதிலும் மேற்கண்டவாறு குறைந்த வட்டியில் கடன் வசதி அளிப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வரையில் வருவாயில் இழப்பு ஏற்படுகிறது. இக்கழகத்துக்கு குறைந்த வட்டியில் நிதி வசதி கிடைக்குமேயானால் அதிக அளவில் கைத்தறி தொழிலுக்கு உதவி செய்ய இயலும்: இதற்கு அரசு மற்றும் ஆயுள் இன்சூரன்ஸ் க்ழகம் போன்ற பொது நிறுவனங்களின் உதவி தேவைப்படுகிறது.

இக்கழகம் கடன் வழங்கும் திட்டத்தில் குறிப்பிடத்தக்க அம்சம், பெற்ற கடன் தொகையைத் தவணைப்படி திருப்பிச் செலுத்திவிட்டு மீண்டும் அதே தொகையை மறு கடனாகப்

பெற வாய்ப்பு உள்ளதேயாகும். இதனால் பங்குதாரர்களுக்குத் தேவையான நிதி வசதி தொடர்ந்து கிடைக்கின்றது.

முதலில் கைத்தறி நிதி கழகமாகச் செயல்பட்டுவந்து இந்நிறுவனம் 1972-ஆம் ஆண்டு இறுதியில் வர்த்தகத் துறையில் ஈடுபடத் தொடங்கி ரூ. 27 இலட்சம் மதிப்புள்ள சாயம் மற்றும் இரசாயனப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்தது. பின்பு 1973-74 ஆண்டுகளில் கோயம்புத்தூர், சேலம், மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நூல்களை வினியோகிக்கும் பணியை மேற்கொண்டது. பின்பு வர்த்தகத் துறையை விரிவாக்கத்துணிகளைக் கொள்முதல் செய்து விற்பனை செய்ய தொர்டங்கியது. 1974-ஆம் ஆண்டின் விற்பனை ரூ. 91.41. இலட்சமாக இருந்தது. 1975, 1976-77 ஆம் ஆண்டுகளில் விற்பனை முறையே ரூ. 25.90 இலட்சம், ரூ. 50 லட்சம் ரூ. 87.64 இலட்சமாகும். 1978-ஆம் ஆண்டில் மொத்த விற்பனை ரூ. 169 இலட்சமாகும். இவ்வாண்டில் ரூ. 3.99 மதிப்புள்ள கைத்தறித் துணிகள் சிங்கப்பூர், ஹாங்காங், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மேலும்1976-77ஆம்ஆண்டுகளில் தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் விற்பனை நிலையங்களைத் திறந்து கைத்தறித் துணிகளை விற்பனை செய்தது. இது தவிர விற்பனைமுகவர்கள், வெளிநாட்டிலும், உள் நாட்டிலும் நியமிக்கப்பட்டனர். 1976-ஆம் ஆண்டு மத்தியில் ஏற்றுமதிக்கான ரெடிமேட் ஆடைகளைத் தயாரிக்கும் நவீன தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.



இக்கழகத்தின் செயல்முறையில் 1976-ஆம் ஆண்டில்தான் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கைத்தறித் தொழில் மேம்பாட்டிற்கு விதிமுறைகளைக் கண்டறிய திரு சிவராமன் அவர்கள் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழுவின் பரிந்துரைக்கு



ஏற்ப தமிழ்நாட்டில் கரூரில் ஒரு கைத்தறி ஏற்றுமதிக்கான துணி தயாரிக்கும் திட்டத்தையும், காஞ்சீபுரம் மற்றும் ஈரோட்டில் கைத்தறி தீவிர அபிவிருத்தித் திட்டங்களையும் துவக்கி செயலாக்கும் பணியை மாநில அரசு இந்நிறுவனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் குறிக்கோள் 11,000 நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை அளிப்பதுடன்அவர்களுக்குமாதம் ஒன்றுக்குக் குறைந்த பட்ச ஊதியமாக ரூ. 300 கிடைக்கச் செய்வதேயாகும். இதை தொடர்ந்து 78-ஆம் ஆண்டில் குறிஞ்சிப்பாடியிலும், சேலத்திலும் இத்தகைய திட்டங்கள் தொடங்கப்பட்டன. இத்திட்டங்களில் தொடங்கப்பட்டது முதல் 1978-ஆம் ஆண்டு இறுதிவரையில் ரூபாய் 312.01 இலட்சம் பெறுமானமுள்ள துணிகள் தயாரிக்கப்பட்டு அதில் ரூ. 286.32இலட்சம் மதிப்புள்ளவைகள் விற்பனை செய்யப்பட்டன. ஆண்டு இறுதியில் 5981 நெசவாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர்.



மேற்கண்ட வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுவதில் சில இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்து தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வர்த்தகக் கழகத்தின் ஓர் அம்சமாகச் செயல்பட்டதால் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி வசதியைக் குறைந்த வட்டியில் பெற முடியவில்லை. வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன்களின் மூலம் அதிகமாக வட்டி செலுத்த வேண்டியிருந்ததால் உற்பத்தி செய்யப்பட்ட துணிகளில் சற்று விலை கூடுதலாக இருந்தது. இதனால் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதில் சிரமம் ஏற்பட்டு, சரக்குகள் இருப்பும் அதிகரிக்கத் தொடங்கியது. மேலும் கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதற்குக் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசாங்கத்தினிடமிருந்து கிடைத்த ரிபேட் இக் கழகத்திற்குக் கிடைக்காததால் 1977-78 ஆண்டுகளில் இக்கழகம் ஓரளவு நஷ்டமடைய நேரிட்டது. இத்திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்படவும், உற்பத்தி செய்யப்படும் துணிகளைக் கஷ்டமின்றி விற்பனை செய்யவும், நஷ்டத்தைக் குறைக்கவும் இத்திட்டங்களைக் கூட்டுறவுத் திட்டங்களாக மாற்றம் செய்வது நல்லதென முடிவு செய்யப்பட்டு அவ்விதம் 1-1-79 முதல் செயல்பட்டு வருகிறது. இதனால் சலுகை வட்டியில் நிதி வசதி பெறவும் மத்திய மற்றும் மாநில அரசிடமிருந்து விற்பனையின் பேரில் ரிபேட் பெறவும் வசதி ஏற்பட்டுள்ளது. இனி வரும் ஆண்டுகளில் கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படும் கடன் உதவியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் (31-3-83) பங்குதாரர்களின் எண்ணிக்கையை 6,700 ஆக அதிகரிக்கவும் கடன் உதவியை ரூ. 300 இலட்சமாக உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. தவிரவும் மொத்த விற்பனையை ரூ. 15 கோடிக்கு உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குறியீட்டை அடைவதற்கு ஏதுவாக ரூ. 120 இலட்சம் வரை அரசாங்கத்திடமிருந்து நிதி உதவி பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவரும் நேர்த்தியான கைத்தறியை - வெளிச்சந்தையிலிருந்து ஏராளமான பணத்தை ஈட்டித்தந்த கைத்திறமையை- விட்டுவிட வேண்டும் என்பது வரவேற்கத்தக்க கருத்தல்ல.

—பேரறிஞர் அண்ணா.

மேலும், இந்நிறுவனத்திற்குப் போதுமான அளவு நிதி வசதி கிடைப்பின் மூன்று ஆண்டுக் காலத்தில் திருப்பிச் செலுத்தும் வகையில் மத்திய காலக் கடன்களை அளிக்க இயலும். தற்பொழுது வழங்கப்பட்டு வரும் குறுகிய காலக்கடன்களைத் தவிர வேறு எவ்வகையில் கைத்தறித் தொழிலுக்குச் சேவை செய்ய முடியும் என்பதுபற்றி கண்டறியப்பட்டு வருகிறது.

## ஆறாவது திட்டக் காலத்தில்

# கதர்-கிராமக் கைத்தொழில்


திரு ஏ. அப்துல் அஜீஸ் ஐ.ஏ.எஸ். தலைமை நிர்வாக அலுவலர்

கதர் கிராமத் தொழில் வாரியம்


கதர் திட்டத்தை ஓர் அரசின் திட்டமாக மக்களது துயர் துடைக்கும் திட்டமாக, முதல்முதலாக, ஏற்று நடத்தியது தமிழக அரசேயாகும்.

**நோக்கம் :**

தமிழ்நாடு அரசும், தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியமும் கதர் வளர்ச்சித் திட்டத்தை மூன்று அடிப்படை நோக்கங்களுடன் மேற்கொண்டிருக்கின்றன.

- கிராமங்களில் வேலை வாய்ப்பற்ற இருண்ட நிலைமையை மாற்றிப் போதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவது.

- கிராமங்களிலுள்ள வேளாண்மைக் குடிமக்கள் தங்களது ஓய்வு நேரங்களைப் பயனுள்ளவகையில் நூல் நூற்பதில் ஈடுபட்டு, தங்களது குறைந்த வருவாயைக் கூட்டிக் கொள்ள வழி செய்வது.

கிராம மக்கள் தங்கள் தேவைக்கு வேண்டிய துணிகட்கு மற்றவர்களை நம்பியிராமல் தன்னிறைவு கொண்டவர்களாகத் தங்களையே ஆக்கிக் கொள்வதற்குத் தக்க உதவி செய்வது.

**ஆரம்பக் காலத்தில் :**

தொடக்க காலத்தில், கைராட்டைகள் அதிக அளவில் விநியோகிக்கப்பட்டன. இவற்றின் மூலம் குறைந்த அளவு ஊதியமே கிடைத்தது. நூற்போரின் வருவாயைப் பெருக்க மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக முற்றிலும் உலோகத்தினால் ஆன இராட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளை நூற்புக் கூடங்களில் வைத்து கிராமங்களில் உள்ள பெண்களுக்குப் பயிற்சி அளித்து ஒரு நிரந்தர வருமானத்தை ஈட்டிடும் வகை செய்வது கதர்த் திட்டமேயாகும். இக்கூடம் ஒன்றில் ஒரே சமயத்தில் 32 பெண்கள் நூற்பதில் ஈடுபட முடியும். நூற்பதன் மூலம் இவர்கள் நாளொன்றுக்கு ரூ. $2\frac{1}{2}$ முதல் 3 வரை ஊதியம் பெற்றனர்.

**பொங்கல் பரிசு :**

வளர்ந்து வரும் வாழ்க்கைத் தரத்திற்கேற்ப இவர்களின் ஊதியத்தையும் உயர்த்த வேண்டியது அவசியமென்று வாரியம் உணர்ந்தது. 14-1-79 பொங்கல் திருநாள் முதல் ஊதியத்தை உயர்த்தியுள்ளது.

இதனால் நூற்போரின் வருவாய் நாள் ஒன்றுக்கு ரூ. 3-லிருந்து ரூ. $3\frac{1}{2}$ வரை உயர்ந்துள்ளது. தற்சமயம் தமிழகத்தில் 308 கிராமிய நூற்புக் கூடங்கள் இயங்கி வருகின்றன இதில் 9856 பேர் வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர். இந்நிலையம் ஒன்று நிறுவிட ஏறத்தாழ ரூபாய் முப்பதினாயிரம் தான் ஆகிறது. இவ்வளவு குறைந்த மூலதனத்தில் இத்தனைப் பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர கதர் திட்டத்தினால் மட்டுமே இயலும். வருகின்ற ஆண்டுகளில் மேற்கொண்டு 300 கிராமிய நூற்புக் கூடங்கள் துவக்க வாரியம் திட்டமிட்டுள்ளது. மேலும், மெல்லிய ரக துணிகள் உற்பத்தி செய்ய தேவையான நூல் உற்பத்திக்காக 10 மில்லின் நூற்புக்கூடங்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

நூற்போரின் உற்பத்திப் பெருக்கத்திற்கேற்ப நெய்வோரின் உற்பத்தியைப் பெருக்கவும், நெய்தவில் கிராமப்புறங்களில் படித்த வேலையற்றோர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், அவர்கள் எளிதில் இயக்கக்கூடியதுமான நேபாளி மாதிரி தறிகளை அதிக அளவில் விநியோகிக்கவும் வாரியம் திட்டமிட்டுள்ளது.

**ஆராய்ச்சி :**

வளர்ந்து வருகின்ற தேவைக்கேற்பவும் நாகரீக முன்னேற்றத்தையும் கவனத்திற் கொண்டு, கதர் நெய்தல், சாயமிடுதல், அச்சிடுதல் முதலியவைகளைப்பற்றி ஆய்ந்து அதற்கேற்ப கதர் உற்பத்தியைப் பெருக்கிட வேண்டுமென்பது நெடுநாளைய அவா. இது அண்மையில்தான் நனவாகியது. அத்தகைய ஆராய்ச்சி நிலையம் ஒன்றினை நிறுவிட மையத்திட்டக்குழு அண்மையில் அனுமதித்துள்ளது. அதன்படி 1979-80-ல் கதர் பட்டுக்கென ஆராய்ச்சிக் கூடம் குடந்தையில் அமைக்கப்பட உள்ளது. 1980-81-ல் திருப்பூரில் பருத்தி ரகக் கதர் துணி ஆராய்ச்சிக் கூடம் அமையும்.





## வேலைவாய்ப்பு :

கதர் திட்டத்தில் வாரியத்தின் கீழ் 33,437 பேர்கள் நிலையான வேலை வாய்ப்பினைப் பெற்று வருகின்றனர். ஆறாவது ஐந்தாண்டுத்திட்ட முடிவு காலத்தில் இத்தொழிலில் மேலும் ஏறத்தாழ 15,340 பேர்கள் கூடுதலான வேலை வாய்ப்புப் பெறுவர்.

## கிராமத் தொழில் நோக்கம் :

கிராமப்புறங்களில் நிலவும் ஏழ்மை நிலையைப் போக்கவும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களையும், வேலையாட்களையும் பயன்படுத்தவும், நுகர்வோர்களதுதேவைகளுக்குக்குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ளவர்களின் தேவைக்கான பொருட்களை வழங்க வகை செய்யும் வண்ணம் கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை பனைத்தொழில், நாட்டுச் செக்கு எண்ணெய், கைக்குத்தலரிசி, உண்ணா எண்ணெய் சோப்பு, தோல், நார், தச்சு, கருமாரத் தொழில், சுண்ணாம்பு, பழப் பக்குவபடுத்துதல், கரும்பு— வெல்லம்-கண்டசாரி, தயாரித்தல், பிரம்பு மூங்கில், தேனீ வளர்த்தல், மண்பாண்டம் முதலியனவாகும்.

## பனைச் செல்வம் :

தமிழகத்தில் 4 கோடி பனை மரங்கள் உள்ளன. இவற்றுள் 2 கோடி பனைமரங்கள பயன் தரக்கூடியவை. அவற்றுள் 60 இலட்சம் பனைமரங்கள் தற் சமயம் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இவற்றிலுள்ள நுங்கு, பதநீர், பனை வெல்லம், பனந்தும்பு கொண்டு பிரஷ்கள் முதலியன தயாரிக்கப் படுகின்றன. இத்தொழிலில் 2,34,080 பேர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருளின் மதிப்பு ரூபாய் 1,018,33 இலட்சம் ஆகும். பனை மரம் ஒரு கற்பகத்தரு. இதனாலேயே அரசு இதனை மாநில மரமாக அண்மையில் அறிவித்துள்ளது. பனைச்செல்வத்தைப் பெரிதும் பயன்படுத்தத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## மின்விசைச் செக்கு :

ஊட்டச்சத்தும் உடலுக்கு நன்மை தரக்கூடியதுமான நாட்டுச். செக்கெண்ணை மக்களால் பெரிதும் விரும்பி பயன் படுத்தக்கூடியதாகும். இதன் உற்பத்தியைப் பெருக்கவும், இதனை நம்பியிருப்போரின் வருவாயை பெருக்கவும் மின் விசைக் கொண்ட செக்குகள் தற்போது விநியோகிக்கப்பட்டு வரப்படுகின்றது. மேற்கொண்டு 10,000 செக்குகள் ஆறாவது திட்டக் காலத்தில் விநியோகிக்கப்பட உள்ளன.



## குப்பையிலிருந்து செல்வம் :

வீணாகிப்போகும் துணிகள், காகிதங்கள் முதலியனவற்றிலிருந்து தரமுள்ள அழகிய காகிதங்கள், அட்டைகள் கைமுறையினால் வாரியத்தின் மேற்பார்வையின்கீழ் தயாரிக்கப்படுகின்றன. இவற்றிற்கு மக்களிடையே ஒரு தனி வரவேற்பு உள்ளது.

கிராமப்புறங்களில் வேறெதற்கும் பயன்படாத கத்தாழை, வாழை முதலியவற்றில் நார் எடுக்கப்பட்டு அதன் மூலம் கட்டுக் கயிறு, பாய் முடையும் கயிறு விநோதமான பைகள் முதலியனதயாரிக்கப்படுகின்றன. இவ்வாறாக ஒவ்வொரு கிராமத் தொழிலும் மக்கட்கு வேண்டிய பொருட்கள் அவற்றின் தரமும் நயமும் குன்றாமல் தொடர்ந்து இருந்து வர இவ்வாரியம் பாடுபடுகிறது. கிராமத் தொழில்களை வாரியம் தனது 176 அலகுகள் மூலமும், 1,261 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் செயல்படுத்தி வருகிறது. இத்தொழில்கள் மூலம், ரூ. 1,925.53 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் கடந்தஆண்டு உற்பத்தி செய்யப்பட்டது. ரூ. 2,179.59 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனையாயிற்று. 2,99,700 வேலை பேர் வாய்ப்புப் பெற்றனர். ரூ. 782.28 இலட்சம் அவர்கள் ஊதியமாகப் பெற்றனர்.

## மறுமலர்ச்சி :

கிராமத் தொழில்கள் மூலம் கிராமப்புறங்களில் நிலவி வரும் வேலையின்மைப் பிரச்சனைக்குப் பெரும் தீர்வு காண இயலும் என்பதை இன்றைய அரசு உணர்ந்துள்ளது. கிராமப்புறங்களில் பெரும்பாலும் பயனற்று அல்லது வீணாகிப் போகும் மூலம் பொருட்களைக் கொண்டு மக்களுக்குத் தேவையான பொருட்களை எளிதில் உற்பத்தி செய்யும் திறம் கொண்டவை இத்தொழில்கள் போதிய ஊக்கம் அளிப்பதன் மூலம் கிராமங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டே உற்பத்தியைப் பெருக்கவும், அதன் மூலம் மேலும் பலருக்கு அவரவர் இருப்பிடங்களிலேயே வேலைவாய்ப்புத் தரக்கூடிய தன்மையுடையவை, இத் தொழில்கள். இவற்றிற்குக் குறைந்த மூலதனமே தேவை. பெரும்பாலான கிராமப் பொருட்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகும்.

அரசு தனது அலுவலகங்களிலும், அரசு சார்புடைய நிறுவனங்களிலும் இத்தகைய கிராமப் பொருட்களையே உபயோகிக்க வேண்டுமென கடந்த ஆகஸ்ட் திங்களில் ஆணை பிறப்பித்துள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ. 1,467 இலட்சம் மதிப்புள்ள, தோல், காகிதம், எண்ணெய், கைக்குத்தல் அரிசி, ரொட்டி முதலிய பொருட்கள் அரசுக்கும் அதன் நிறுவனங்களுக்கும் தேவைப்படுகின்றன என்று வாரியம் ஆய்வு செய்து கண்டறிந்தது. தற்சமயம் இவ்வினங்களில் ரூ. 883.10 இலட்சம் மதிப்புள்ள பொருட்களே உற்பத்தியாகின்றன. எனவே, தற்பொழுதுள்ள தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க, மேற்கொண்டு, 345 அலகுகளை வாரியம் துவக்கவும், 10,000 மின்விசை செக்குகளை விநியோகிக்கவும் வேண்டும். இவைகளைக் கருத்தில் கொண்டு வாரியம் தனது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியுள்ளது.



## புதிய நோக்கங்கள் :

கதர் கிராமத் தொழில்கள் நிறைவேற்றி வந்த நோக்கங்களு



டன் கீழ்க்காணும் நோக்கங்களையும் இவ்வாரியமானது ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேற்கொள்ள உள்ளது :

• 7-வது ஐந்தாண்டுக் கால திட்டம் முடிவடையும் காலத்தில் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பது.

• அதே காலத்தில் வறுமை நிலையில் யாரும் இல்லாதபடி செய்வது.

• எல்லோருக்கும் எல்லா வசதியும் செய்து கொடுப்பது.

• வருமானத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கணிசமாகக் குறைப்பது.

இவைகளைக் கருத்திற்கொண்டு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**வேலையற்றோர் எண்ணிக்கை :**

தற்சமயம் தமிழகத்தில் 12 இலட்சம் பேர் வேலை வாய்ப்பின்றி உள்ளனர். மேலும் 7 இலட்சம் பேர் குறைந்த வருமானத்துடன் குடும்பத் தொழில்களை செய்கின்றனர். இன்னும் 7 இலட்சம் பேர், குடும்பத் தொழிலில் உதவி செய்கின்றார்கள். எனவே,வேலைவாய்ப்பு அற்றோர்களுக்கும் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி தரவும், வறுமை நிலையில் உள்ளவர்களை மேம்பாடையச் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**புதிய தொழில்கள் :**

அண்மையில் மைய அரசு 504 இனங்களை சிறுதொழில் மற்றும் கிராமத் தொழில்கள் என வகைப் படுத்தி ஒதுக்கியுள்ளது. அவற்றில் 51 இனங்களைக் கிராமத் தொழில்களுக்கென ஒதுக்கிட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு அனைத்திந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் கோரப்பட்டுள்ளன. இவ்வகை அறிக்கை வெளியிடப்படுமேயானால் உற்பத்தியும்; வேலை வாய்ப்பு எண்ணிக்கையும் கணிசமாகப் பெருகும்.

**முன்னேற்றத்திற்கான வழி முறைகள் :**

கிராமத் தொழில்களை மேம்பாடடைய பின்வரும் வழி முறைகள் பின்பற்றுவதும் எனவும் வாரியம் முடிவு செய்துள்ளது.

தற்போதுள்ள கைவினைஞர்களுக்குத் தொடர்ந்து போதுமான வேலைவாய்ப்பு அளிப்பது.

> ஆலைத் துணியில் தான் கண்ணை கவரும் ஆடைகளைத் தயாரிக்க முடியும் என்று நம்பப்பட்டது. ஆனால், இப்போது கைத்தறியில் கண்ணைக் கவரும் ஆடைகள் வேகமாகத் தயாராகின்றன.
>
> — பேரறிஞர் அண்ணா

தற்போதுள்ள தொழில்களை விரிவுபடுத்துவதன் மூலமும் பல்வகைபடுத்துவதன் மூலமும் புதிய தொழில்களைத் துவக்குவதன் மூலமும், வேலைவாய்ப்புப் பெருகிடச் செய்வது.

கலை, கால்நடை, பால்பண்ணை, கோழி வளர்ப்பு, கிராம வீட்டு வசதி முதலிய தொழில்களில் பங்கேற்பது.

நாட்டின் பொருளாதார சமூக நிலைக்கு ஏற்ப கிராமப்புறங்களில் உள்ள கைவினைஞர்களின் பொருளாதார நிலையை உயர்த்த பாடுபடுவது.

**வாரியத்தின் பணி :**

தற்சமயம் கதர் கிராமத் தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் தங்கு தடையின்றி தாராளமாக சகாய விலையில் கிடைப்பது இல்லை. மலைவாழ் பெருங்குடி மக்கள் எளிதில் சென்று தங்களது பொருட்களை விற்பனை செய்ய போக்குவரத்து இன்னும் பிற வசதிகள் இல்லை. வளர்ந்து வரும் தொழில் மயத்தில் மாற்றுப் பொருட்கள் மூலம் கிராமப் பொருட்கள் விற்பனையாகாமல் தேக்க நிலையடைந்து வருகின்றன.

எனவே, கிராமத் தொழில்கள் ஓங்கி வளர கீழ்க்காணும் நடை



குறிப்பிட்ட கால வரம்பிற்குள் கிராமக் கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்திற்கு வேண்டிய அளவு வருவாயைப் பெருக்க ஆவன செய்வது.

இவற்றிற்கு வேண்டிய சூழ்நிலையையும், அமைப்பையும் ஏற்படுத்தித் தருதல்.

உற்பத்தி பெருகுவதற்கு வேண்டிய ஆராய்ச்சியை மேற்கொள்வது. புதிய மூலப் பொருட்களை இனங்கண்டு கொள்வது, உற்பத்தி செய்யும்வுரை முறைகளை வகைப்படுத்துதல், மாதிரிகள் ஏற்படுத்துதல், இவற்றை ஒருங்கிணைப்பது முதலியன.

பெரிய தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை சேகரிப்பது, பாதிப் பகுதிப் பொருட்கள் தயாரிப்பது. (Semi Finished Goods)

தொழில்துறையுடன் இணைந்த விவசாயம், தோட்டக் முறைகளைச் செயலாற்ற வாரியம் முனைந்துள்ளது:

*குறைந்த கால வட்டி விதித்தல்; நிதி வசதி அளித்தல்.

*தங்கு தடையின்றி மூலப் பொருட்கள் சகாய விலையில் கிடைக்க வேண்டிய வழிமுறை செய்தல்.

*மூலப் பொருட்களை இனங்கண்டு கொள்ளுதல், உற்பத்தி வழி முறைகளை ஆராய்ச்சி செய்தல்.

*பயிற்சிக்கான வாய்ப்பு.

*நிரந்தரமாக எளிதில் விற்பனையாகக் கூடிய வாய்ப்பு.

..ஆக ஆறாவது ஐந்தாண்டு திட்டம் முடிவடையும்போது, கதர் கிராமத் தொழிலின் மூலம் ஏறத்தாழ 6 இலட்சம் பேர்களுக்கு அதிகமாக வேலை வாய்ப்பு பெறுவார்கள்.

# டிஐஐஸியின் தராசுமுள் சிறுதொழில் சார்பில் சாய்ந்திடும்




சிறுரகத் தொழில்களின் மேம்பாடு வலியுறுத்தப்படும் இச்சந்தர்ப்பத்தில், சிறு தொழில்களுக்கு எமது உதவி கணிசமாக அளிக்கப்படுகிறது. சிறுரகத் தொழில்களுக்குச் சுலப விதிகளின் பேரில் டிஐஐஸி தீவிரமாக நிதி உதவி அளிக்கிறது!

தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரி யூனியன் பகுதியிலும், நிலம், கட்டிடம், இயந்திரச் சாதனங்கள் முதலிய நிரந்தர சொத்துக்களை வாங்கிட டிஐஐஸி உதவி அளிக்கிறது.

- பின்தங்கிய பகுதிகளில் வட்டி விகிதம் 9.5% மற்ற பகுதிகளில 11%
- கடன் திருப்பிச் செலுத்த தாராள விடுமுறை. நீண்டகாலத் தவணை
- ஈட்டுப் பொறுப்பு பற்றி சுலபமான விதிகள்.
- அந்நியாச்செலாவணிக் கடன்களும் இயந்திரங்கள் முதலியவற்றை இறக்குமதி செய்ய அளிக்கப்படும்.
- பின்தங்கிய பகுதிகளில் உள்ள சிறுரகத் தொழில்களுக்கு மேலும் அதிகப்படி சலுகை — 15% மத்திய அரசு மானியம், நீண்டகால அவகாசத்துக்குப்பின் தவணையைச் செலுத்தலாம்.
- ISI முத்திரை பெறும் உற்பத்தி பொருட்களுக்கு வட்டியில் ½% தள்ளுபடி

TIIC ESTD. 1949

மேற்கொண்டு விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

நிர்வாக இயக்குநர்,

**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

27, ஒயிட்ஸ் சாலை,
சென்னை-600 014.
தொலை பேசி: 83078
தந்தி: MINDVEST டெலக்ஸ்: MIIC-7164
மண்டல அலுவலகங்கள்:
கோயமுத்தூர் & மதுரை
கிளைகள்: தர்மபுரி, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர்

**டிஐஐஸி**

சிறுரகத் தொழில்களுக்கு சுலப விதிகளில் நிதி உதவி.



# சாதனைச் சரித்திரம்

திரு. சூ. ர. கருப்பண்ணன், ஐ.ஏ.எஸ்.
தனி அலுவலர், கோ-ஆப்டெக்ஸ்

கோ-ஆப்டெக்ஸ்" என்றழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் 1935-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டில் கைத்தறியை வர்த்தக அடிப்படையில் அமைத்து, வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, மிகக் குறைந்த உறுப்பினர் 1935-ல் எண்ணிக்கையுடன் 1935-ல் தனதுபணியைத்துவக்கியது. இன்றைய தினம் கோ-ஆப்டெக்ஸ் மிகப் பிரம்மாண்டமான அமைப்பாக உருவாகியுள்ளது. 946 பிரதம கூட்டுறவுச்சங்கங்கள் இதனுடன் இணைந்துள்ளன. அச்சங்கங்களின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 2.07 லட்சமாகும்.

## பங்கு முதல்

31-3-1979 நிலவரப்படி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 584.92 லட்சம் ரூபாய். 31-3-1978-ல் இது 283லட்சம்ரூபாயாகத்தான் இருந்தது. பங்கு மூலதனத்தில் 534 50லட்சம்ரூபாயை அரசாங்கம் வழங்கியுள்ளது 1979-ஆம் ஆண்டில் அரசின்பங்கு முதலீட்டு உதவி 1978 மார்ச் நிலவரத்தோடு ஒப்பிடும்போது, இரட்டிப்பாக்கப்பட்டிருப்பது மனநிறைவு தரும் வகையில்அமைந்திருக்கிறது. தமிழ்நாடு அரசு அதிக உதவியை, உரிய நேரத்தில் கொடுத்து உதவியதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

பிரதம சங்கங்களுக்குத் தேவைப்படும் நூல் வகைகள், சாயங்கள், ரசாயன பொருட்கள் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து விநியோகிப்பதும், பிரதம சங்க உற்பத்தி பொருட்களுக்குச் சந்தைகள் தேடித் தந்து உதவுவதும், கோ-ஆப்டெக்ஸின் முக்கிய குறிக்கோள்.

## மூலப்பொருட்கள் விநியோகம்

மூலப்பொருளான நூலை விநியோகிப்பதற்குக் கோ-ஆப்-டெக்ஸ் 19 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இவற்றின் மூலம் 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும் உற்பத்திசெய்து வரும் சுமார் 3000 கட்டுப் பருத்தி நூல் பிரதம சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நூலை வழங்குவதுடன், மற்ற மூலப்பொருட்களான, பட்டுநூல் சாயங்கள், ரசாயனப்பொருட்கள், செயற்கைப்பட்டு நூல், நீண்ட இழை நூல், ஜரிகை ஆகியவற்றையும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பிரதம சங்கங்களுக்கு விநியோகிப்பதற்காககோ-ஆப்டெக்ஸ், தற்போது விரிவானதொரு திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. தற்போது விநியோகிக்கப்பட்டு வரும் மூலப்பொருட்களின் மதிப்பு ரூ. 27 கோடி. இது 60 கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கொள்முதல்

பிரதம சங்கங்களின் கையிருப்பை கணிசமான அளவிற்குக் குறைக்கும் வகையில், கொள்முதல் நடைவடிக்கைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. மூன்று மாதங்களுக்கு முன்னரே, பிரதம சங்கங்களுக்குத் துணி வகைகளின் தேவைபற்றிய விவரங்களைத் தெரிவித்து, அந்த விவரங்களின்படி கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கான திட்டவட்ட ஆர்டர் அளவுரும் நிர்ணயிக்கப்படுகின்றன.



கோ-ஆப்டெக்ஸ் கொள் முதல் கணிசமான அளவிற் குப் பெருகிக் கொண்டே வந்திருக்கிறது. 1968-69-ல் கோ-ஆப்டெக்ஸ் பிரதம சங் கங்களிலிருந்து 346 லட்சம் மதிப்புள்ள துணி வகைகளைக் கொள்முதல் செய்தது.

1979 பிப்ரவரி மாதம் கொள்முதல் செய்த அளவு 1750 லட்சம் ரூபாய் மதிப் பிற்கான துணிவகைகள். தமிழ்நாட்டிலும், வெளி மாநிலங்களிலும் சங்கிலித் தொடர் போன்று கோ-ஆப் டெக்ஸ் நிறுவி நடத்தி வரும் 390 விற்பனை நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப் படும் துணிவகைகள் விற் பனை செய்யப்படுகின்றன. இவை தவிர நாடு முழுவ திலும் 126 ஏஜெண்டுகள் கோ-ஆப்டெக்ஸ் துணிவகை களை விற்று வருகின்றனர். தமிழ் நாட்டிலும், வெளி மாநிலங்களிலும் 24 கிடங்கு களை கோ-ஆப்டெக்ஸ் வைத்திருக்கிறது. உற்பத் திப் பெருக்கத்திற்கு ஏற்ப விற்பனை முடுக்கி விடுவதற் காக கோ-ஆப்-டெக்ஸின் விற்பனை விறுவிறுப்படைந் துள்ளது. ஆரம்பத்தில் மிகச் சாதாரணமாகத்தான் விற்பனை தொடங்கப் பட்டது. பின்னர் படிப்படி யாக வளர்ந்தது. 1969 70-ல் ரூ. 433 லட்சம் மதிப் புள்ள துணி வகைகளை கோ-ஆப்-டெக்ஸ் விற்றது. 1979 பிப்ரவரி மாதம் இது ரூ. 2,700 லட்சம் மதிப்பிற்கு பெருகியது. 1978-ல் ரூ. 23 கோடி அளவிற்குக் கைத்தறி துணி வகைகள் கோ-ஆப்-டெக்ஸ் மூலம் விற்கப்பட் டன.

ஆறாவது திட்ட இறுதியில் கைத்தறி நெசவாளர்களில்



60 சதவீதம் பேர் கூட்டுறவு அமைப்புக்களின் கீழ் வந்து விடுவர். அப்போது கைத் தறித் துணிவகைகள் உற் பத்தி ரூ. 80 முதல் 90 கோடி மதிப்பிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற் போது கோ-ஆப்டெக்ஸ், பிரதம சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவிகிதத் தைக் கொள்முதல் செய் கிறது. இதே அளவிற்குக் கொள்முதல் நிலைநாட்டப் படவேண்டுமென்றால், அடுத்த ஐந்து ஆண்டுகளுக் குள் ஆண்டிற்கு ரூ. 40 முதல் 45 கோடி மதிப்பிற்கான துணி வகைகளைக் கொள்முதல் செய்வதற்கு ஏற்றமுன்னேற் பாடுகள் அனைத்தும் கோ-

ஆப்டெக்ஸ்செய்தாக வேண் டும். இந்தக் குறிக்கோளைக் கருத்தில்கொண்டு கோ-ஆப் டெக்ஸ் தனது விற்பனையை கணிசமான அளவிற்கு உயர்த் தக் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது:—

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புதிதாக 250 விற்பனை நிலையங்கள் திறக்கப்படும். ஏற்கனவே செயல்பட்டு வரும் 150 விற் பனைக் கூடங்கள் நவீன வசதிகளுடன் திருத்தியமைக் கப்படும். இதற்கு ரூ. 300 லட்சம் செலவாகும்.

ஆறாவது திட்டக் காலத் தில் மேலும் 5 மாதிரிகள் மற்றும் சேவை நிலையங்கள் ரூ. 17.50 லட்சம் செலவில்





உருவாக்கப்படும். கைத்தறி கள் உற்பத்தி முறைகளைத் திருத்தியமைக்கவும், புது மாதிரிகளை உருவாக்கவும் இந்நிலையங்கள் நெசவாளர் களுக்கு உதவும். தமிழ்நாடு அரசின் ரூ. 3·50 லட்சம் உதவியுடன் ஏற்கெனவே மதுரையில் கைத்தறித்துணி புது மாதிரிகள் உற்பத்தி நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. 1979-80ல் உத்தேசிக்கப்பட் டிருக்கும் இரண்டு நிலையங் கள், சேலத்திலும், கோவை யிலும் திறக்கப்படும்.

கைத்தறி மூலம் செயற்கை இழைத்துணிகள் வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதற் குப்போதுமக்களது நல்லா

தரவு கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு கட்டம் கட்ட மாக, அறுநூறிலிருந்து ஆயிரம் கைத்தறிகள் வரை செயற்கை இழைத் துணி களை உற்பத்தி செய்வதற் கான திட்டம் செயல்படுத்தப் படும்.

மத்திய அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற் றும் வகையில் ஜனதா ரகத் துணிகள் தயாரிப்பில் ஈடுபட் டுள்ளது. 15,000 தறிகள் ஜனதா ரகச் சேலைகள் வேஷ்டிகள் லுங்கிகளைத் தயாரித்து வருகின்றன. இதன் மூலம் ஏழை மக்க ளுக்குக் குறைந்த விலையில் தரமான துணிவகைகள் கிடைக்கின்றன. 1979-80ல் 20 மில்லியன் மீட்டர் ஜனதா துணி வகைகள் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற குறி யளவை அடைய நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கைத்தறித் துணிவகைகள் ஏற்றுமதிக்காக 'கோ-ஆப் டெக்ஸ் இண்டர்நேஷனல்' என்ற தனி அமைப்பு உரு வாக்கப்பட்டுள்ளது. 1978-ல் இந்த அமைப்பு ரூ. 76.15 லட்சம் மதிப்புள்ள துணி வகைகளை வெளிநாடு களுக்கு அனுப்பியது. ஆஸ்தி ரேலியா, பிரிட்டன், ஜெர் மனி, போன்ற நாடுகளுக் கான, கைத்தறி துணி ஏற்று மதிகள் அதிகரிக்கப்பட்டுள் ளன. 1979-80-ல் கோ-ஆப்- டெக்ஸ் சுமார் ரூ. 3 கோடி அளவிற்கான துணிகளை ஏற்றுமதி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம சங்கங்களுக்குகோ- ஆப்டெக்ஸ் பணம் வழங்கு வதில் பிரச்சினைகள் எதுவும் இல்லை. கோ-ஆப்டெக்ஸ் நிதி நிலவரம் வசதியாக இருப்பதால் பிரதம சங்கங்

களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் கொடுக்க வேண்டிய நிலுவை எதுவுமில்லை.

மேற்கண்ட சாதனைச் சரித்திரம் படைத்த கோ-ஆப்டெக்ஸ், கைத்தறிக் கண்காட்சி வெள்ளிவிழாவை இன்று சிறப்பாக கொண்டாடுவது மிகப் பொருத்தமான ஒன்று. இது கோ-ஆப்டெக்ஸ் வரலாற்றில் மிக பெரும் திருப்புமுனை. இந்த மகிழ்வுமிக்க நல்லநேரத்தில் தமிழ்நாடு அரசு நல்லெண்ணத்துடன் அளித்து வரும் நல்லாதரவுக்கும், இந்திய அரசாங்கக் கைத்தறி அபிவிருத்திஆணையர், கைத்தறி ஜவுளி இயக்குநர் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் அரசு அலுவல் சாராத பெருமக்கள் எல்லாவற்றிற்கும் மேலாக கைத்தறி நெசவாளர் பெருமக்கள் ஆகியோர் கோ-ஆப்டெக்ஸின் நடவடிக்கைகளில் நெருக்கமாக இணைந்து ஆற்றியபணிகளுக்குக் கோ-ஆப்டெக்ஸ் தனது நன்றியைத தெரிவித்துக்கொள்ளுகிறது. தமிழ் நாடு அரசு நிதியுதவி மட்டுமின்றி மனப்பூர்வமாக உதவிகளை நலகிவருகிறது. இத்தகைய நல்லாதரவும் ஒத்துழைப்பும் பல்வேறு தரப்பிலிருந்தும் கிடைத்ததால் கோ-ஆப்டெக்ஸ் சிறந்த தன்னிகரில்லாச் சாதனைச் சரித்திரத்தைப் படைத்திருக்கிறது. பல்வேறு தரப்பு பெருமக்களும் அரசும் அளித்த ஆலோசனைகள் உதவிகளால் கைத்தறி நெசவாளர்களுக்குச் சீரான வேலை வாய்ப்பு, நியாயமான ஊதியத்திற்கு உத்தரவாதம் செய்து தரப்பட்டிருக்கிறது. எந்த உயர்ந்த நோக்கங்களுக்காக கோ-ஆப்டெக்ஸ் உருவாக்கப்பட்டதோ அவற்றைநிறைவு செய்யும்வகையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கோ-ஆப்டெக்ஸ் வளர்ந்தோங்கும் என்று நம்புகிறோம். சமுதாயத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றமுடியும் என்றும் நம்புகிறோம்.



## காஞ்சியின் சிறப்பு

காஞ்சிபுரம் கைத்தறிசரகம், மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியது. சென்னை, செங்கல்பட்டு, வடஆர்க்காடு மாவட்டங்கள் காஞ்சி சரகத்தின் கீழ் வருகின்றன. இதன் தலைமை நிலையம் காஞ்சிபுரமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளுள் 85,088 தறிகள் காஞ்சிபுரம் சரகத்தில் உள்ளன.

பட்டு நெசவில் காஞ்சியில் ஆரணியும் புகழ் பெற்று விளங்குகின்றன. குறிப்பாக காஞ்சிபுரம் பட்டு இந்தியாவிலும் உலகின் பிற பகுதிகளும் புகழ் ஓங்கியுள்ளது. காஞ்சிபுரம் ஆரணி பகுதிகளில் மட்டும் 15 ஆயிரம் பட்டு கைத்தறி நெசவாளர்கள் இருக்கின்றனர். 24 பட்டு சங்கங்களில் 7,281 நெசவாளிகள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதன்படி 48 சதவீதம் நெசவாளிகள் இப்பகுதியில் கூட்டுறவின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

1977-78ஆம் ஆண்டில் பட்டு கூட்டுறவு சங்கங்கள் ரூ. 5.13 கோடிக்கு பட்டு துணிகளை உற்பத்தி செய்து, ரூ. 5.53 கோடிக்கு விற்பனை செய்துள்ளன.


மிகவும் நம்பிக்கையூட்டும் இணையற்ற ஆடைகள்...
கோ-ஆப்டெக்ஸ்
அறிமுகப்படுத்தும்
ஈடு இணையற்ற
புதியவகை
பாலியஸ்டர்
சர்ட்டிங்குகள்
எமது பிரசித்திபெற்ற விற்பனை நிலையங்களில் கிடைக்கும்
100% பாலியஸ்டர்
80X20 பாலியஸ்டர் பிளெண்டட்
80X20 பாலியஸ்டர் பிளெண்டட்
67X33 பாலியஸ்டர் பிளெண்டட்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

# தமிழ் நாடு பொன் இழை ஆலை!



காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு பொன் இழை ஆலையின் நிறுவனத் திறன் ஆண்டு ஒன்றுக்கு 4,000 மார்க் பொன் இழை யாகும். இங்கு உற்பத்தியாகும் பொன் இழைகள், பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப் படுகின்றன. மொத்தமுள்ள 20 நூற்பு இயந்திரங்களில், சில தொழில்நுட்பச் சிக்கல்கள் காரணமாக, கடந்த ஆண்டு வரையில் 10 இயந்திரங்கள்தான் இயங்கிவந்தன. அப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு தற்போது 20 இயந்திரங்களும் இயங்கி வருகின்றன. 1977ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை 4.52 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 993 மார்க் பொன் இழைகள் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் 1978ஆம் ஆண்டில் 7.46 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 1,277 மார்க் பொன் இழை உற்பத்தி செய்யப் பட்டது.

1977 ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் இந்த ஆலைக்கு ரூ. 1.35 இலட்சம் நட்டம் ஏற் பட்டது.

அந்த நிலையை மாற்றி 1978ஆம் ஆண்டில் 0.29 இலட்சம் மொத்த ஆதாயம் ஈட்டியது. இந்நிறுவனத்தின் நிதிநிலை இடர்பாட்டைத் தீர்க்க, அரசு, குறித்தகாலக் கடனாக ரூ. 3 இலட்சம் வழங்கியுள்ளது.



டிரான்ஸ்மிஷன் (மின்விசை) கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்



டிராக்டர் இணைப்பு (Trailers) வண்டிகள்



எனுமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும் ஏற்ற பலவித மேசை. நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு தோல் பொருட்கள்

# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014



# கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழ்நாட்டில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் 2.94 இலட்சம் கதிர்கள் நிறுவனத் திறனுடன் இயங்கி வருகின்றன. இவைகள் 20-லிருந்து 120 வரையிலான நம்பர் எண்ணுள்ள நூல்களை உற்பத்தி செய்கின்றன. திருவில்லிபுத்தூர், மற்றும் நாசரேத் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு ஆலைகளும் தங்களது திறனை 25,000 கதிர்களாக ஏற்கனவே விரிவ படுத்தியுள்ளன. மீதமுள்ள 10 ஆலைகளில் 9 ஆலைகள் ஒவ்வொன்றும் தங்களது நிறுவனத் திறனை 25,000 கதிர்களாக விரிவுபடுத்த ரூ. 12 கோடி அளவில் திட்டம் இயற்றி விரிவு படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளன. சேலம், வேலூர், மேலூர், மாயவரம், தாராபுரம், காஞ்சீபுரம், கரூர் ஆகிய இடங்களிலுள்ள ஆலைகள் விரிவுபடுத்தும் பணியை முடித்து விட்டன. கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங் களிலுள்ள ஆலைகளின் விரிவுபடுத்தும் பணிகளும் விரைவில் முடிவுறும் நிலையிலுள்ளன. தற்போது எல்லா ஆலைகளும் ரூ. 6 கோடி செலவில் நவீனப் படுத்தும் திட்டத்தை மேற் கொண்டுள்ளன. இதில் ரூ. 4 கோடியை இந்திய தொழிலியல் வளர்ச்சி வங்கி குறைந்த வட்டிக் கடனாக வழங்கியுள்ளது. இவ்வாலைகள் தங்களது உற்பத்தியை பெருக்கவும், நூலின் தரத்தை உயர்த்தவும், இந்த நவீனப்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டுள்ளன. 12 கூட்டுறவு நூற்பாலைகளும் 1978 ஜனவரி முதல் டிசம்பர் முடிய மொத்தமாக ரூ. 200.00 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளன. ஆனால் இவ்வாலைகள் 31—12—77-வுடன் முடிந்த ஆண்டில் அடைந்த நிகர நட்டம் ரூ. 114.00 இலட்சமாகும். இவ்வாலைகளில் 1977ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை 123.74 லட்சம் கிலோ நூல்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்க 1978ஆம் ஆண்டின் நிகரான காலத்தில் 142.09 இலட்சம் கிலோ நூல்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தமிழ்நாட்டில் துணி ஆலைகளில் ஒரு தொழிலாளி பெறும் சராசரி கூலியானது பிற மாநில துணி ஆலைகளில் உள்ள ஒரு தொழிலாளி பெறும் சராசரி கூலியை விடக் கூடுதலாகும்.

# நார் இழை உடை தொடங்கி..
# நாளை உலகின் உடைவரை...
# தொடர்ந்து வரும் அறைகூவல் ஏற்போம்;
# அதற்கான தலைமையும் வகிப்போம்!



### இரட்டை நோக்கங்கள்

நெசவாளருக்கு நிரந்தர வேலை வாய்ப்பு, திட்டவட்டமான மாத வருவாய், மக்களது துணித் தேவைகளை உறுதியுடன் நிறைவேற்றும் பாங்கு—இந்த தமிழக அரசின் இரட்டைக் குறிக் கோள்க்காக பல அபிவிருத்தித் திட்டங்கள் கைத்தறி துறையால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### நெசவாளர் சமுதாயம்

தமிழ்நாட்டிலுள்ள 5,56,000 கைத்தறிகள் மூலம் 10 லட்சம் நெசவாளர்களும் 30 லட்சம் பேர்களுக்கும்வாழ்வு பெற வழிசெய்யப்பட்டுள்ளது.

### துணி உற்பத்தி

இந்தியாவின் 2300 மில்லியன் மீட்டர் உற்பத்தியில் ரூ. 150 கோடி மதிப்பிற்கான 600 மில்லியன் மீட்டர் துணி வகைகள் உற்பத்தி செய்யப் படுகின்றன.

- தமிழ்நாடு பஞ்சாலை கழகம் எல்லா நூற்பு நிலையங்களுக்கும் தனது கொள்முதல் பிரிவு மூலம் பருத்தி கொள்முதல் செய்து வினியோகிக்கிறது.
- 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும் 2.94 லட்ச கதிர்கள் மூலம் 8,500 கட்டு நூலை உற்பத்தி செய்கின்றன.

தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் ஜரிகை வகைகளை வினியோகிக்கிறது.

- புதுமாதிரிகளை உருவாக்கும் நிலையங்கள் மாதிரிகளைத் தயாரித்து வியாபாரத்தை பெருக்க உதவுகின்றன. 6-வது திட்டக் காலத்தில் மேலும் மூன்று மாதிரி நிலையங்கள் உருவாகும். இதுபோல மேலும் 2 நிலையங்கள் 79-80ல் திறக்கப்படும்.

ஏற்றுமதிக்கும் பலரக துணி செய்வதற்கும் தரமான சாயம் தோய்க்கப்பட்ட நூல் தற்போதைய 60 கட்டுகளி லிருந்து தினம் 260 கட்டுகள் வழங்க 8 சாயப் பட்டறைகள் அமைக்கப்படுகின்றன. 6-வது திட்டக் காலத்தில் மேலும் 20 சாயப் பட்டறைகள் உருவாகும்.

- தமிழ்நாடு கூட்டுறவு பிராசஸிங் நிலையம் செயற்கை இழைத் துணிகளையும் பிராசஸ் செய்ய ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. மேலும் 31 லட்சம் முதலீட்டில் பாலிஸ்டர் துணி பிராசஸிங் செய்ய உத்தேசித்துள்ளது.

### கோ-ஆப்டெக்ஸ்

- 946 பிரதம கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கும், உச்ச சங்கம் கோ-ஆப்டெக்ஸ். 19 நூல் விற்பனை நிலையங்களை நடத்துகிறது. எல்லாவிதமான மூலப் பொருட்களையும் நெசவாளர் களுக்கு வழங்குவதற்குத் திட்டங்களை தீட்டியுள்ளது.

நாடு தழுவிய 225 விற்பனைக் கூடங்களை தமிழ்நாட்டிலும், 150 பிற மாநிலங்களிலும நடத்தி வருகிறது.

1978ஆம் ஆண்டு இதுவரை இல்லாத அளவிற்கு ரூ. 29.67 கோடிக்கான துணி வகைகள் விற்பனை செய்யப்பட்டன.

புதிய விற்பனை அரங்குகளைத் திறக்கவும், இருப்பனவற்றைப் மெருகேற்றவும் நடவடிக்கை கள் நடத்தப்பட்டு வருகின்றன. மில் ஜவுளி ஆலைகள்-அவற்றின் கடும் போட்டி—இவற்றைச் சமாளித்து வெற்றிநடை போடுகிறது. நெசவாளருக்கு உடுத்துவோர்க்கும் இலாபம் அளிக்கிறது.

### ஏற்றுமதி

இந்த ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் —இன்டர்நேஷனல் வெளிநாடுகளுக்கு 3 கோடி ரூபாய் மதிப்பிற்குத் துணி வகைகளை ஏற்றுமதி செய்ய ''ஆர்டர்கள்'' பெற்றிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் சாராத தனிப்பட்ட நெசவாளர் களுக்கும், நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும், விசைத் தறி மற்றும் உபகரணத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர் களுக்கும் தமிழ்நாடு கைத்தறி நிதி வசதி, மற்றும் வர்த்தகக் கார்ப்பரேஷன் உதவிகளைச் செய்து வருகிறது. 1978ல், ரூ. 165.9 லட்சம் ரூபாய் நிதி யுதவியளிக்கப்பட்டிருக்கிறது.

### அறைகூவல்

எங்களை நோக்கியுள்ள அறை கூவல்கள் எவை? என்பதை இப்பொழுது நீங்கள் அறிந் திருப்பீர்கள். சமுதாயத்தில் இதுவரை புறக்கணிக்கப் பட்டிருந்த மக்கள் சமுதாயங்கள், செழிப்பான நல்வாழ்வு பெறவேண்டும். அவர்கள் தொழில் செய்வதற்கு பாது காப்பு வேண்டும்—என்பது தான் தமிழ்நாடு அரசின் ஒரே விருப்பம். என்றாலும், இவர்களது சேவையால் நாட்டின் அத்தியாவசிய துணித் தேவைகள் நிறைவு செய்யப் படுகிறது. உழைக்கும் துணி வகைகள்—சிக்கனச் செலவில், சிங்கார உடுப்புகள் இவர்களால் நமக்குக் கிடைக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பல வெள்ளி விழாக்களைக் காண வாழ்த்துகிறோம்.

- தமிழ்நாடு கூட்டுறவு ஜவுளி பிராசசிங் மில்ஸ் லிமிடெட்
- கூட்டுறவு நூற்பு ஆலைகள் (12)
- தமிழ்நாடு ஜரிகை லிமிடெட், காஞ்சீபுரம்
- தமிழ்நாடு கைத்தறி நிதி வசதி கார்ப்பரேஷன், வர்த்தக நிறுவனம் லிமிடெட், சென்னை.
- 946 பிரதம சங்கங்கள்

## இழையிலிருந்து துணிவரை

ELEGANT

# தமிழ்நாட்டில் கைத்தறி வளர்ச்சி

முறையான அடிப்படையில் அமையாத துறையில் மிகப் பெரிய தொழிலான கைத்தறி, சுமார் 5,56,000 கைத்தறிகளை, தன்னகத்தே கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள 10 இலட்சம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு நல்குவதோடு 30 இலட்சம் பேர்களுக்கு வாழ வகையும் செய்கிறது. தொழில் புரியும் மொத்த மக்கள் தொகையில் சுமார் 6 சதவீதத்தினர் கைத்தறி நெசவாளர்களாக உள்ளனர். நாட்டில் மொத்தத்தில் தயாரிக்கப்படும் 2,300 மில்லியன் மீட்டர் துணியில், அவர்கள் ரூ. 150 கோடி மதிப்புள்ள 600 மில்லியன் மீட்டர் துணியை தயாரித்து வருகின்றனர். கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்று தற்போது 33 சதவீதம் நெசவாளர்களை இத்தொழில் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்திய அரசு அறிவித்துள்ள புதிய துணிக் கொள்கையின்படி, ஆலைகள், விசைத்தறிகளின் நெசவுத் திறன் தற்போதைய அளவிலேயே நிறுத்தப்பட்டு மேற்கொண்டு கூடுதலாகத் தேவைப்படும் உள்நாட்டு, வெளிநாட்டுத் துணித் தேவைகள் கைத்தறித் துறை மூலம் நிறைவு செய்யப்பட வேண்டும்.



கைத்தறித் தொழிலை வளர்ச்சியடையச் செய்யவும், மாநில நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும் மாநில அரசு தீவிர அக்கறையுடன் கீழே குறிப்பிட்டுள்ள, நோக்கங்களைக் கொண்ட பல்வேறு திட்டங்களைச் செயலாக்கி வருகின்றது :—

(1) மிகப் பெரும்பான்மையான நெசவாளர்களைக் கூட்டுறவு இயக்கத்தின்கீழ்க் கொண்டுவந்து அவர்களுக்கு முழு நேர வேலை வாய்ப்புக்கும் நிரந்தரமான கூடுதல்பட்ச ஊதியத்திற்கும் வகை செய்தல்.

(2) சரக்கு தேக்கத்தைத் தவிர்க்கும் பொருட்டு, கைத்தறி துணிகளை மக்கள் விரும்பி வாங்கும் வண்ணம் புதிய வண்ண வடிவமைப்புகளுடன் நவீன ரகத் துணிகளின் உற்பத்தியை மேற்கொண்டு உற்பத்தி அமைப்பை மாற்றியமைத்தல்.





(3) நெசவாளர் கூட்டுறவு அமைப்பின்கீழ் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளுக்கு ஒரு உறுதியான ஏற்றுமதிச் சந்தையை உருவாக்கும் நோக்குடன் உற்பத்தியைப் பெருக்கி, வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்தல்.

(4) சமுதாயத்தில் உள்ள ஏழை, எளியவர்களுக்கு குறைந்த விலையில் துணிகள் கிடைக்கும் பொருட்டு ஜனதா துணிகளின் உற்பத்தியைப் பெருக்குதல்.

(5) இராஜா சுப்பிரமணியம் கமிட்டியின் பரிந்துரைகளை செயலாக்கும் விதத்தில், பொதுவாக கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம், பணி நிலைமை, இதர வசதிகள் குறித்து சட்ட பாதுகாப்பு ஏற்படுத்துதல்.

நம் மாநிலத்தில் 1977–78 இல், 81 புதிய தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், 13 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் அமைக்கப்பட்டன. இச் சங்கங்களிலும், ஏற்கனவே உள்ள சங்கங்களிலும் தனியார் துறையிலுள்ள நெசவாளர்களில் 23,780 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். நம் மாநிலத்தில் இரண்டு ஏற்றுமதி உற்பத்தி கைத்தறி திட்டங்களும், நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்களும் அமைக்கப்பட்டு முழு நேர வேலை வாய்ப்பு நல்கும் வகையில் 3,100 தனிப்பட்ட நெசவாளர்கள் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1978–79 இல், புதிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பித்தும், ஏற்கனவே உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை புத்துயிரூட்டியும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 14,000 நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டனர். இவ்வாண்டில், தறியில்லா நெசவாளர்களுக்கு வேலை தந்துதவிட 30 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை அமைத்திட உத்தேசிக்கப்பட்டு, அவற்றில் 6 சங்கங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டு 15 சங்கங்களை நிறுவும் வேலை நடந்துகொண்டு வருகிறது. இதன் மூலம் 3,600 தறியில்லா நெசவாளர்கள் பயனடைவர். மாநிலத்தில் இயங்கி வரும் 6 திட்டங்கள், ஆண்டிறுதிக்குள் 10,000 நெசவாளர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும். 31—12—78 வரை 6,887 நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். கைத்தறியில் புதிய வண்ணமிகு வடிவமைப்புகளை உருவாக்க, சேலத்திலும், கோயமுத்தூரிலும் இரண்டு வடிவமைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

1979–80 ஆண்டில், 16,000 நெசவாளர்களை கூட்டுறவின்கீழ் கொணரும் திட்டத்தில் 70 புதிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கும் 6,000 தறியில்லாத நெசவாளர்களுக்கு 30 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 35 நலிந்த சங்கங்களில் மேலும் உறுப்பினர்களைச் சேர்த்து புத்துயிர் ஊட்டச் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கம். (கோ-ஆப்டெக்ஸ்), கூட்டுறவு நூற்பு ஆலைகளிடமிருந்து நூலைக் கொள்முதல் செய்து, 19 நூல்

ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களின் குறியீடான 16,000-க்கு நெசவாளர்களை உயர்த்துவதற்காக இந்த ஆண்டில் 6,000 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து கைத்தறி வளர்ச்சி ஏற்றுமதி உற்பத்தி திட்டங்களின்கீழ் சேர்க்கப்படுவார்கள். மேற்கண்ட முறைகள் இவ்வாண்டில் 15 மில்லியன் மீட்டர் அதிக உற்பத்திக்கு வழி வகுக்குமென திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் நவீன டிசைன்களில் புதிய ரகங்களை உற்பத்தி செய்யவும் கூட்டுறவில் உள்ள 2,500 தறிகள் இவ்வாண்டில் நவீன மயமாக்கப்படும். புதிய டிசைன்களை வகுத்து அவற்றை நெய்வதற்கு நெசவாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக ஏற்கனவே உள்ள 3 வடிவமைப்பு நிலையங்களை தவிர இவ்வாண்டில் மேலும் ஒரு வடிவமைப்பு நிலையம் அமைக்கப்படும். நவீன நெசவுக் கருவிகள் மூலமாக புதிய டிசைன்களில் புதிய ரகத் துணிகளை நெய்வதற்காக, கூட்டுறவு நிறுவனத்திலுள்ள சுமார் 4,920 நெசவாளர் களுக்கு பயிற்சி அளிக்கப்படும். துணிகளின் தரத்தையும், தோற்றத்தையும் மேம்படுத்த, இவ்வாண்டில் முக்கியமான இடங்களில் நான்கு நவீன சாயத்தொழிற்சாலைகள் அமைக்கப்படும். தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிக அளவில் வியாபாரத்தில் உதவி அளிக்கும் பொருட்டு கோ-ஆப்டெக்ஸ், நாட்டில் 40 புதிய விற்பனை நிலையங்களைத் திறந்து ஏற்கனவே உள்ள 25 விற்பனை நிலையங்களை நவீனமயமாக்கும். நெசவாளர் நலத்திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் துறையிலுள்ள சுமார் 20,000 நெசவாளர்கள் நெசவாளர் பாதுகாப்பு சேமிப்புத் திட்டத்தின்கீழ் கொணரப் படுவர்.







## நலத் திட்டங்கள்.

### 1. கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு, பாதுகாப்பு திட்டங்கள்:

கூட்டுறவுப் பிரிவில் தற்போது நெசவாளர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட நெசவாளர்களின் சேமிப்பு பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்களின் ஊதியத்திலிருந்து 6 சதவீதமும் அரசின் பங்காக 3 சதவீதமும் அளிக்கப்படுகிறது இத்துடன் 7 சதவீதம் வட்டி சேர்த்து நெசவாளர்களுக்கு

அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ஆயுள் பாதுகாப்புக் குழுமத்தின் திட்டம் என்ற புதிய மற்றொரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நெசவாளர்கள் எவரேனும் இறக்க நேரிட்டால், சட்டப்படியான அவர் தம் வாரிசுக்கு, அவர் நிதியுடன் மேலும் ரூ. 500 ஆயுள் பாதுகாப்பு நிறுவனத்தால் (எல். ஐ. சி.) வழங்கப் படுகிறது. இந்தத் தொகையை ரூ. 500-லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 64,365 நெசவாளர்கள் இருக்கின்றனர். மேலும் இத்திட்டத்தை கவர்ச்சிகரமாக்கும் வகையில் ஆயுள் ஈட்டுறுதியை விரிவுபடுத்துதல் முதலியவை குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 1979-80இல் கூட்டுறவு நிறுவனங்களில் கூடுத லாக 20,000 நெசவாளர்களைச் சேர்ப்பதற்கான செயற் குறிப்புகள் உள்ளன.

2. நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டம்:

1962ஆம் ஆண்டுக்கு முன்னர் செயலில் இருந்து அதன் பிறகு நிறுத்தி வைக்கப்பட்டிருந்து நெசவாளர்கள் வீட்டு வசதி திட்டத்தை திரும்பவும் போதிய வகையில் திருத்தங்கள் செய்தும், இந்திய அரசு வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் மூலம் நிதி உதவி பெற்றும் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் நல்ல முறையில் இயங்கும் சங்கங்கள் மூலம் ஆறாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 10,000 வீடுகள் கட்டவும் கருதப்பட்டுள்ளது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வீடு ஒன்றுக்கு வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் மூலம் கடனாக ரூ. 3,500 வீதமும் இந்திய அரசிட மிருந்து மானியமாக ரூ. 1,500 வீதமும் தொகை பெறும். வீட்டு வசதி நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் மூலம் வாங்கும் தொகைக்கான வட்டியை மாநில அரசு மான்யமாக வழங்கும்.



ஒரு நெசவாளர் செலுத்தத்தக்க மாதத் தவணை ரூ. 15 ஆகும். இந்த திட்டம் குறித்து இந்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட் டுள்ளது. ஒப்புதல் பெற்றதும் உடன் செயல்படுத்தப்படும். 1979-80ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 2,000 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

கைத்தறித் துணி நூல் துறையின் பிரிவுகள்.

கைத்தறித் தொழிலின் நிலையான வளர்ச்சிக்காக கூட்டுறவு முறையில் கைத்தறித் தொழிலை ஆதரித்து மேம்பாடு செய்யும் பொருட்டு இடு பொருட்கள், மூலப் பொருள்கள், இன்றியமையா அடிப்படைத் தேவைகளை அளிக்கும் பொருட்டும் அரசுச் சார் புள்ள நிறுவனங்களைப் பொதுத் துறையிலும் கூட்டுறவுத் துறை யிலும் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. அவையாவன:—

1. வியாபார உதவிக்காக தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கமும் (கோ-ஆப்டெக்ஸ்), கூட்டுறவின்கீழ் இல்லாத வர்களுக்கு உதவ தமிழ்நாடு கைத்தறி நிதியுதவி வணிக கழகமும், தரமான நியாய விலையில் நூல் விநியோகத்திற்கு கூட்டுறவு நூற்பு ஆலைகளும், கைத்தறித் துணிகளை பதனிட கூட்டுறவு பதனிடும் தொழிற்சாலையுமாகும். இத்துறையில் பல்வேறு மேம் பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக இப்பிரிவுகளும் நிறுவனங்களாக பணியாற்றுகின்றன. இந்நிறுவனங்கள் வேலை செய்யும் விதம் பற்றியும் அவைகளின் வருங்காலத் திட்டங்கள் பற்றியும் விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

2. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் கோ-ஆப்டெக்ஸ் என்ற பெயரில் பிரபலமான தலைமைச் சங்கமாகும். இம்மாநிலத்திலுள்ள எல்லா ஆரம்பக் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களும் இதன் கிளைச் சங்கங்களாகும். இக் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு ரூ. 3.33 கோடி. அதில் அரசுத் தொகை ரூ. 2.85 கோடி.

கோ-ஆப்டெக்ஸ் தரவேண்டிய குறுகிய கால கடனின் நிலுவையைச் சரிசெய்து அத்தொகையை பங்குத் தொகை மூலத்தில் சேர்ப்பதற்கு மேலும் 50 இலட்சத்திற்கு அரசு அனுமதி

## கோ-ஆப்டெக்ஸ் (Co-optex)

மக்களால் போற்றிப் புகழப்படும் 'கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (Tamil Nadu Handloom Weavers Co-operative Society Ltd.) என்று தலைமைச் சங்கமாகும். இது 1935-ல் தொடங்கப்பட்டது. 44 ஆண்டுகளாக நற்பணி யாற்றி வருகின்றது. நாட்டிலுள்ள எல்லா நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தலைமைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கூட் டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெற்று விநியோகிப்பதே, இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி



வழங்கியுள்ளது. நூல், சாயம், இரசாயனப் பொருள்கள் போன்ற மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து தொடக்க நெச வாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகம் செய்யவும் அவைகளால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி பொருட்களுக்கு விற்பனை உதவி அளிப்பதுமே கோ-ஆப்டெக்ஸின் முதன்மையான நோக்கமாகும். ரிசர்வ் வங்கி இயல்பான வரம்பின்கீழ் நடை முறை மூலதனமாக ரூ. 650 லட்சமும், பண்டிகைக் காலங் களில் அதிக கொள்முதலுக்காக சிறப்பு வரம்பின்கீழ் அளிக்கப் படும் தொகையாக ரூ. 350 லட்சமும் அளித்துள்ளது.

கூட்டுறவு நூற்பு ஆலைகளின் மூலமாக உற்பத்தி செய்யப் படும் நூலை கோ-ஆப்டெக்ஸ் அதன் 19 நூல் கிடங்குகள் மூலமாக தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்க ளுக்கு விநியோகம் செய்கின்றது. இந்நிறுவனத்தின்கீழ் தமிழ் நாட்டில் மொத்தம் 225 சில்லரை விற்பனை நிலையங்களும் இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் 150 விற்பனை நிலையங் களும் உள்ளன. இது தவிர 128 தனி விற்பனையாளர்களையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில், கைத்தறிப் பொருட்கள் விற்பனைக்காக முகவரமைப்பு முறையில் அமர்த்தியுள்ளது.

1978ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் ரூ. 19·71 கோடிகள் மதிப்புள்ள கைத்தறி துணிகளை தொடக்கச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து ரூ. 29.67 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. 1977ஆம் ஆண்டு விற்பனைத் தொகை ரூ. 23.00 கோடி. இவ்வாறாக 1978ஆம் ஆண்டைய இலக்கு ரூ. 30 கோடி விற்பனையை அடைந்துள்ளது.

மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களில் 60 சதவீதம் பேர்களை கூட்டுறவின்கீழ் கொண்டு வரும் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. அதன்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் புதிய பல நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.





இது தவிர ஏற்கனவே உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் அதிக அங்கத்தினர்களும் சேர்க்கப்படுகின்றனர். இயங்காமல் உள்ள தறிகளில் அதிக அங்கத்தினர்களும் சேர்க்கப்படுகின்றனர். இயங்காமல் உள்ள தறிகளை இயங்க வைக்கும் நோக்கத்துடன் நலிந்தும், செயல்படாமலும், உள்ள சங்கங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட முறைகளின் பலனாக உற்பத்தியை ஆறாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் 60 சதவீதம் பேர் கூட்டுற வின் கீழ் கொண்டுவரப்படுவர் எனவும் கைத்தறியின் மூலமாக சுமார் ரூ. 80 கோடியிலிருந்து ரூ. 90 கோடி வரை கைத்தறித் துணி உற்பத்தி செய்யப்படும் எனவும் மதிப்பிடப் பட்டுள்ளது. தற்பொழுது கோ-ஆப்டெக்ஸ் தொடக்கச் சங்கங் களின் 50 சதவீத உற்பத்தியை கொள்முதல் செய்கின்றது. இதே நிலையில் கொள்முதல் செய்ய வேண்டுமானால் வருகின்ற ஐந்தாண்டிற்குள் வருடத்திற்கு ரூ. 40 கோடியிலிருந்து 45 கோடிக்கு கொள்முதல் செய்வதற்கு இயலும் வகையில் கோ-ஆப்டெக்ஸ் தயார் செய்யப்பட வேண்டும். அந்த அளவிற்கு கைத்தறி பொருட்களை விற்பனை செய்வதென்பது, அதுவும் மில் மற்றும் விசைத் தறியின் உற்பத்தி விற்பனையுடன் கடும் போட்டியிடுவதென்பது உண்மையிலேயே ஒரு கடினமான அறை கூவலாக ஏற்றுக்கொள்கின்ற ஒரு செயலாகும். இந்நோக்கத்தை கருத்திற் கொண்டு கணிசமான அளவிற்கு விற்பனையை அதிகரிக்க பல திட்டங்களை கோ-ஆப்டெக்ஸ் செயல்படுத்தி வருகின்றது.



நூல் எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான். நூலுடன் தொடர்பு கொண்ட நெசவாளர் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதுதான்! பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவது தான் மிக முக்கியமான தேவையாகும். மற்ற ஆலைத் தொழிலுக்குக்கிடைக்காத வாய்ப்பும், வசதியும் விஞ்ஞானக் கருவிகளின் உதவியும் கிடைக்காத போதும் கூட நேர்த்தியான மெச்சத்தக்க துணிகளைக் கைத்தறியாளர்கள் தயாரித்து வருகிறார்கள்.

—பேரறிஞர் அண்ணா



# கடவுள் உணவு

காளான்கள் எப்போதுமே சிறந்த பதார்த்தமாகக் கருதப் பட்டு வந்துள்ளது. இவற்றைக் 'கடவுள் உணவு' என்று கிரேக் கர்களும், ரோமானியர்களும் அழைப்பது வழக்கம்.

இந்திய மக்கள் குறிப்பாக பழங் குடியினர் இவற்றைப் பண்டைக் காலத்திலிருந்தே சுவைத்துச் சாப்பிட்டு வருகின்றனர். இவை காட்டுக் காளான்களாகும்.

உலகில் ஒரு இலட்சம் வகை யான காளான்கள் காணப்படுவ தாகவும் இவற்றில் சுமார் 2,000 வகைகள் மட்டுமே சமையலுக்கு உதவும் என்றும் கூறப்படுகிறது. இவற்றில்கூட 25 வகைகள் மட்டுமே உலகெங்கும் சமையல் காளான்களாக அழைக்கப்பட்டு, உணவுப் பதார்த்தமாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், கடந்த 50 ஆண்டுகளாக 4 வகைக் காளான்கள்தான் வர்த் தக ரீதியாகப் பல நாடுகளில் பயி ரிடப்பட்டு வருகின்றன. அவை வெள்ளைப் பொத்தான் அல்லது சீமைக் காளான், வைக்கோல் காளான், ஜப்பான் காளான், சிப்பிக் காளான் ஆகியவையாகும்.

காளான் உபயோகிக்கும் நாடு களில் அமெரிக்காவும், மேற்கு ஜெர்மனியும் முன்னணியில் உள் ளன. மேற்கு ஜெர்மனியில் காளான் உற்பத்தி 2-வது உலக யுத்த கால கட்டத்தில் அமைப்பு ரீதியாக அறிமுகம் செய்யப்பட் டது. தற்போது காளான் உப யோகிப்பதில் அந்த நாடு முத லிடம் பெறுகிறது. ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தைச் சேர்ந்த நாடுகளும் சீனா, தைவான், கொரியா ஆகியவை யும் முக்கியமாகக் காளான் ஏற்று மதி செய்யும் நாடுகளாகும்.

பிறநாடுகளுடன் ஒப்பிடும் போது காளான் உற்பத்தியில் இந்தியா மிகவும் பின்தங்கி நிற் கிறது. ஆண்டுதோறும் 10 இலட்சம் டன் புதிய காளான்கள் உற்பத்தி செய்யப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் பங்கு வெறும் 300 டன்கள்தான்.

காளான் பற்றி மக்களிடையே தவறான உணவு என்ற எண்ணம் உள்ளது. பலர் இதை விஷ உணவு என்றும் மற்றும் சிலர் இதை மாமிச உணவு என்றும் கருது கின்றனர். இந்தத் தவறான கருத்துக்களைத் தீவிர பிரசாரத் தின் மூலம் அகற்ற வேண்டும்.

உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உதவி களுடன் ஜம்மு-காஷ்மீர், இமா சலப் பிரதேச அரசுகள் காளான் பண்ணைகளை மேற்கொண்டுள் ளன.

சுவை அல்லது மணத்துக்காக மட்டுமே காளான் சாப்பிடும் பழக்கம் அண்மைக்காலம் வரை இருந்தது. அது ஒரு சத்தான உணவு என்று கருதப்படவில்லை. எனவே, மேட்டுக்குடிகளின் உணவு வகையாக அது திகழ்ந் தது. ஆனால், காளான்களில் புரதச்சத்து ஏராளம் இருப்பதை யும், மனிதனுக்குத் தேவையான பெரும்பாலான அமிலங்கள் நிறைந்திருப்பதையும் ஆராய்ச்சி யாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இறைச்சி, முட்டை, மீன், பால் போன்ற புரதச்சத்துணவுகளு டன் ஒப்பிடும்போது, காளான், மலிவானது. பெரும்பாலும் காய் கறி உணவுப் பழக்கத்தைக் கொண்ட மக்கள் வாழும் இந்திய நாட்டில் காளானின் உணவு மதிப்பு அதிகமாகும். இதில் மாவுச் சத்தும், கொழுப்புச் சத்தும் கிடையாது. எனவே, நீரிழிவு நோய் உள்ளவர்கள், இதைச் சாப்பிடலாம். புற்று நோய்க்கு மருந்து காணும் முயற்சியில் காளானைப் பயன் படுத்த ஜப்பான் நிபுணர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இதில் சுவையான அம்சம் என்னவெனில், காளான் வளர்ப்பு விவசாயமா? அல்லது தொழில் துறைப் பணியா? என்று வரி விதிப்போர் திணறுவதாகும்!

விவசாயம் என்பதற்கான விளக்கத்தில் காளான் சாகுபடி அடங்குவதில்லை. ஏனெனில், காளான் விதைகள் பூமியில் விதைக்கப்படுவதில்லை.

# கல்வி அறிவு பெற்றிட...

தருமபுரி மாவட்டத்தை தருமபுரி, கிருஷ்ணகிரி என்ற இரண்டு கல்வி மாவட்டங்களாகப் பிரித்து இம்முறைசாராக் கல்வித் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் முறைப்படி கல்வி கற்க இயலாத குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும், கல்வி அறிவு பெற, தொழில் அறிவு பெற வழி வகுக்கப்படுகிறது. வயதின் அடிப்படை 6 லிருந்து 14 வயது வரை ஒரு மையமாகவும், 15-லிருந்து 30 வயது வரை ஒரு மையமாகவும் பிரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

### பத்து மாதப் படிப்பு :

பள்ளி செல்லாத, அல்லது இடையில் நிறுத்தி விட்ட குழந்தைகளுக்குப் பத்துமாதப் படிப்பு வழங்குதல் இதன் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 1977-ல் 16 ஊராட்சி ஒன்றியங்களிலும் 16 மையங்கள் உருவாக்கப்பட்டு 750 பேர் படித்துப் பயனடைந்து இருக்கிறார்கள்.

1978-ல் இது இரண்டு மடங்காக்கப்பட்டு 32 மையங்கள் உருவாக்கப்பட்டு இதில் 1,400 பேர் படித்துப் பயனடைந்தார்கள். இப்பொழுது 64 மையங்கள் செயல்பட்டு வருகிறது. இதில் 2,300 பேர் படித்துப் பயனடைகிறார்கள். இக்கல்வி மையங்கள் 64 துவக்கப் பள்ளி ஆசிரியர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 50-ம், சில்லறைச் செலவிற்காக ரூ. 18-ம் அளிக்கப்படுகிறது.

### விவசாயிகளுக்கு :

15-லிருந்து 35 வயது வரம்பிற்குரியவர்களுக்கு, 8 ஊராட்சி ஒன்றியங்களில் 105 மையங்கள் உருவாக்கப்பட்டு 3,500பேருக்கு எழுத்தறிவு, தொழில் பற்றிய அறிவு வழங்கப்பட்டு வருகிறது.

நிரம்ப விவசாயிகள் உள்ள அரூர், ஊத்தங்கரை, மொரப்பூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களில் 79 மையங்கள் செயல்பட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கல்வி சொல்லித் தரப்படுகிறது.

நெசவுத் தொழில் மிகுதியாக நடைபெறுகின்ற நல்லம்பள்ளி, தருமபுரி, பொன்னாகரம், பாலக்கோடு ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 21 மையங்கள் உருவாக்கப்பட்டு கயிறு திரித்தல், மீன் பிடித்தல், நெசவுத்தொழில் ஆகியவை குறித்தும் சொல்லித் தரப்படுகிறது.

பெண்களுக்கென்று 5 மையங்கள் உருவாக்கப்பட்டு 150 பேர் பயனடைந்து வருகிறார்கள். 10 ஆசிரியர்கள் இம் மையங்களில் பொறுப்பாளராக இருக்கின்றார்கள். இவர்களுக்கு ரூ. 50 சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறது.

1979-ல் பாலக்கோடு காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியங்களில் 100 மையங்கள் திறக்க அரசு அனுமதி கேட்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி, பர்கூர், கெலமங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 100 மையங்கள் உருவாக்க திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

### மதிய உணவு :

தருமபுரி மாவட்டத்தில் 16 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் நடுநிலைப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

மதிய உணவு தயாரிக்கும் பொருட்டு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு மத்திய சமையல் கூடம் கட்டி உணவு வழங்க அரசு தீர்மானித்திருக்கிறது. சமையல்கூடம் கட்டவும், வாகனங்கள் இரண்டு வாங்கவும், பிற சாமான்கள் வாங்கவும்,



ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 3 இலட்சம் தேவையென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 16 ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 48 இலட்சம் தேவை. இதில் 21.6 இலட்சம் அமெரிக்க 'கேர்' நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு அரசு பெற முயற்சி செய்துவருகிறது. இத்திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் 80,000 மாணவ மாணவியர்கள் பயனடைவார்கள்.

**பட்டு வளர்ப்பு :**

பட்டு வளர்ப்பில் மாணவர்களை ஈடுபடுத்த 10 உயர்நிலைப் பள்ளிகளில் பட்டு வளர்ப்புப் பயிற்சி அளிக்க ரூ. 75,000 அரசு ஒதுக்கியது. 1979-80-ல் மேலும் 5 உயர்நிலைப் பள்ளிகளில் பட்டு வளர்ப்பு குறித்து மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

மாணவர்களைச் சிறுசேமிப்பில் ஈடுபடுத்தும் 'சஞ்சயிகா' திட்டம் இம்மாவட்டத்தில்அனைத்து உயர்நிலைப் பள்ளிகள், இடைநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் குருபரஹள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களும் ஈடுபட்டுள்ளனர்கள். இத்திட்டத்தில் 10,509 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

**புத்தக வங்கி :**

புத்தக வங்கித் திட்டத்தின் மூலம் இக்கல்வி மாவட்டத்தில் 14,092 மாணவர்கள் பயன் அடைந்தனர். 29 உயர்நிலைப் பள்ளிகள், 13 மேல்நிலைப் பள்ளிகள், 112 நடுநிலைப் பள்ளிகள், 789 ஆரம்பப் பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் புத்தகங்கள் வாங்கி சேமித்து ஏழை மாணவர்களுக்கு உதவிட வழி ஏற்பட்டுள்ளது. இதுவரையில் புத்தக வங்கியில் சேர்க்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 35,999 ஆகும்.

நடமாடும் அறிவியல் ஆய்வகம் இம்மாவட்டத்தில் இயங்கி வருகிறது. இதன் மூலம் ஆய்வகம் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளில் செயல்முறைப் பயிற்சி அளிக்க ஏதுவாகிறது. இத்திட்டத்தால் தருமபுரி மாவட்டத்தில் 80 உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் செய்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 1 இலட்சமாகும்.

இவ்வாறு, கல்விக் கண் திறந்திட இம்மாவட்டம் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது.



# செயற்கை வைரம்

“அம்மா! எனக்குக் கல்நெக்லஸ் வாங்கித் தரும்படி அப்பாவிடம் சொல்லம்மா!'' இது மகளின் வேண்டுகோள்.

''அந்தப் பச்சைக் கல் அட்டிகைக்குப் பொருத்தமாகப் பச்சை கல் கம்மல், பச்சைக் கல் பதித்த வளையல், பச்சைக்கல் மோதிரம் காட்டுங்க!'' இது கல்யாணப் பெண்ணிற்காகக் கடைக்காரரிடம் பெண்ணின் பெற்றோர்கேட்கும் கேள்வி!

ஆம்! பெண்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் விதவிதமான நகைகள் குறிப்பாகப் பச்சை, சிவப்பு நீலம், மஞ்சள், வெள்ளைக் கற்கள் பதித்த நகைகள், நகைக்கடைகளை அலங்கரிக்கின்றன.

நகைகளின் அழகை அதிகப்படுத்தும் இந்தக் கற்கள் பெரும்பாலும் செயற்கைக் கற்களே!

ரங்கூன் வைரம், ரங்கூன் கல் செயற்கை வைரம் என்று பல பெயர்களால் அமைக்கப்படும்இந்தச் செயற்கை வைரங்கள், இயற்கை வைரத்திற்கொப்பான பளபளப்பும் ஜொலிப்பும் கொண்டவை.

கைத்திறனையும் நுட்பமான வேலையையும் கொண்ட இந்தக் கற்கள் உருவாகுமிடம் திருச்சி மாவட்டம் என்பதும், இங்குப் பட்டை தீட்டப்படும் செயற்கை வைரக்கற்கள்தான் பெரும்பாலும் இந்தியா முழுவதிலும் பவனி வருகின்றன என்பதும், திருச்சிக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தருவதாகும்.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் பர்மாவிலிருந்து வந்த சில வியாபாரிகள் மூலம் இத்தொழில் திருச்சிக்கு வந்ததாகவும், அதனாலேயே இது 'ரங்கூன் வைரம்' என்று பெயர் பெற்றதாகவும் சொல்லப்படுகிறது.

தற்போது திருச்சி நகரிலும், அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் சுமார் 40,000 தொழிலாளர்கள் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். திருச்சியில் இந்தக் கற்கள் விற்பனை செய்ய 3000 கடைகள் உள்ளன.

இந்தச் செயற்கை வைரம் எங்கே தயாராகிறது? எவ்வாறு இவர்களுக்குக் கிடைக்கிறது?

சிவப்பு, வெள்ளை, நீலம், மஞ்சள், பச்சை ஆகிய 5 வர்ணங்களில் தயாராகும் இம் மூலப் பொருளுக்குத் தளம் என்று பெயர். கோவைப்பழம் அளவிலுள்ள இந்தத் தளம் ஒரு கிலோவிற்குச் சுமார் 500 ரூபாயளவில் விற்கப்படுகிறது.

இந்தத் தளத்தை வாங்கித் தகுந்த அளவில் வெட்டி பட்டை தீட்டி, விற்பனை செய்வதே திருச்சி கைவினைஞர்களின் பணி.



செயற்கை வைரத் 'தளம்'

1960ஆம் ஆண்டு வரை இந்த மூலப்பொருள் சுவிட்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. தற்போது கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்திலுள்ள செயற்கைவைரத் தொழிற்சாலையில் இது தயாரிக்கப்படுகிறது. கந்தக அமிலம் (சல்பியூரிக் ஆசிட்), அம்மோனியம் சல்பேட், அலுமினியம் ஹைட்ரேட் ஆகிய இரசாயனப் பொருட்களைக் கலந்து தயாரிக்கப்படுகிறது.

இந்தப்பணி, நான்கு கட்டமாகச் செய்யப்படுகின்றது. முதற்கட்டம் துண்டு வெட்டுவதாகும். இரண்டாவது கட்டரப்பு. மூன்றாவது கட்டம் வண்டிகை அல்லது பட்டை வடிவத்தில் செதுக்குவது. நான்காவது கடைசிக் கட்டம் மெருகூட்டுவது. பட்டை தீட்டுவது வரை சாதாரணமாக இருக்கும் கல்; மெருகூட்டியதும் ஜொலிக்கத் துவங்குகிறது. ஆனால், 100 கிராம் தளத்தினை எடுத்து வெட்டி, மெருகூட்டிய

பின், கிடைக்கும் கற்களின் எடை சுமார் 35 கிராம்தான் தேறும்.



துண்டுகளாக வெட்டப்படுகின்றன.

இந்த நான்கு கட்டப் பணிகளும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பினும் ஒவ்வொரு பணியையும் ஒவ்வொரு தொழிலாளர் செய்கின்றனர். அதாவது கூம்பு அமைப்பவர் பட்டை செதுக்குவதில்லை. பட்டை தீட்டுபவர் மெருகூட்டுவது இல்லை. அவர்களுக்குப் பெரும்பாலும் அடுத்த பணி தெரியாது. இதற்குக் காரணம் பரம்பரை பரம்பரையாகச் சொந்த அனுபவத்தின் மூலம் இதைக் கற்றுள்ளனர். வேறு தனிப்பயிற்சி கிடையாது.

செயற்கை வைரத்தின் விலை அதன் தரத்தைப் பொறுத்தது. சராசரி அளவும் தரமும்கொண்ட ஒரு செயற்கைக் கல்லின் விலை-சுமார் ஒரு ரூபாய் இருக்கும். ஆனால், அதே அளவுள்ள இயற்கை வைரக்கல் வாங்க வேண்டுமானால் ரூ. 3,000 அல்லது ரூ. 4,000 ஆகலாம்! எனவே, செயற்கை வைரம் ஏழை-எளிய நடுத்தர மக்கள் அணியும் தங்க நகைகளில் அசல் வைரத்திற்குப் பதில் பதிக்கப்படுகின்றன.



தரம் வாரியாகப் பிரிக்கப்படுகிறது.

இந்த வைரங்கள் தமிழ்நாடு. கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய தென்மாநிலங்களில் விரும்பி வாங்கப்படுகின்றன. ஒரிசா, மராட்டியம் போன்ற வட மாநிலங்களும் இவற்றை வாங்குகின்றன. சிறிதளவு வெளிநாடுகளுக்கும் இவை ஏற்றுமதி ஆகின்றன. திருச்சியிலிருந்து வெளிமாநிலங்களுக்கு வியாபாரிகள் தங்கள் விற்பனையாளர்கள் மூலம் நேரிடையாகக் கொண்டு சென்று விற்க ஏற்பாடு செய்கின்றனர்.

பல்வேறு தொழில்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இருப்பது போல் செயற்கை வைரத் தொழிலுக்கும் சங்கம் உள்ளது. துவக்கத்தில் இரு சங்கங்களாக இருந்தது. தற்போது 1976 முதல் 'செயற்கை வைரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' என்ற பெயரால் ஒரே சங்கமாகத் திருச்சியில் இயங்குகிறது.

இதன்கீழ் திருச்சி மாவட்டத்தில் லால்குடி, மேலவாளாடி, ஐயம்பாளையம், திருச்சி மணப்பாறை என்ற கிராமத்திலும் கிளைகள் உள்ளன. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் 1,126 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மாதம் சுமார் 200 பேர் வேலை செய்கின்றனர்.

இந்தச் சங்கம் ஏற்பட்டதால் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலையும், நியாயமான கூலியும் கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களும் தனது தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கூலி கொடுக்கின்றனர்.

தனியார் துறையில் வேலை செய்பவர்களுக்கு நாள்தோறும்



பட்டை தீட்டப் படுகிறது.



மெருகூட்டப்படுகிறது

ரூ. 6 முதல் ரூ. 10 வரை கூலி கிடைக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களில் வேலை செய்பவர்களுக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரை கூலி கிடைக்கிறது.

இந்தத் தொழிலில் நுணுக்கமான தொழில். திறனையும் கடின உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டது. எனவே, பெரும் பகுதி கூலியாகவே தரப்படுகிறது. அதாவது மெருகூட்டிய ஒரு கல்லின் விலை ஒரு ரூபாய் என்றால்; மூலப்பொருளின் விலை சுமார் 20 அல்லது 25 காசாகவும், கூலி 75 அல்லது 80 காசாகவும் இருக்கும்.

1976-77ல் இந்தக் கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்கப்பட்ட கற்களின் மொத்த மதிப்பு ரூ. 5,88,506 ஆகும். 1977-78ல் ரூ.7,05,990ம், 78-79ல் பிப்ரவரி வரை ரூ. 72,23,109ம் விற்பனை ஆகியுள்ளது.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தமிழக அரசு மூலதனக் கடனாக ரூ. 2,24,823ம் வழங்கிக் கடனாக ரூ. 50,000மும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிலுக்குக் குறைந்த மூலதனம் போதும். சாதாரணப் பட்டறையில் தொழில் துவங்கலாம். உற்பத்திச் செலவு மிகவும் குறைவாக உள்ளதால் கற்கள் விற்பனையில் அதிக இலாபம் எதிர்பார்க்கலாம். ஆனால், மூலப்பொருளான தளங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்கூடம் இந்தியா முழுவதற்கும் ஒன்றே ஒன்று இருப்பதால், இடையிடையே மூலப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட ஏதுவாகிறது. கூட்டுறவுச் சங்கத்திற்கு மாதம் ஒன்றுக்கு 40கிலோ தளம் ஒதுக்கப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகளில் செயற்கை வைரத் தொழில் மந்த நிலைமை-ஏற்பட்டிருந்தது. தற்போது நிலைமை முன்னேறியுள்ளது. ஒழுங்காக மூலப்பொருள்கள் கிடைத்தால் சாதாரண ஒருவர் குறைந்த மூலதனத்துடன் இத்தொழிலை நிறுவி கூடுமான இலாபம் அடைய நிறைய வாய்ப்புண்டு என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—கே. நடராசன்



தரம் வாரியாகப் பிரிக்கப்படுகிறது

# பால் வளம்

சென்னை நகரில், தமிழ்நாடு பால்வள நிறுவனம் மூலம் 1976-77, 1977-78 ஆகிய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட பால் அளவு:

(இலட்சம் லிட்டர்களில்)

| 1976-77 | 1977-78 |
|---|---|
| 648.08 | 756.20 |

சென்னையில்

① பதப்படுத்தப்பட்ட பால் 4,938 லிட்டர்
(தினசரி சராசரி விற்பனை)

| | லிட்டர் விலை ரூ. பை |
|---|---|
| (1) கண்ணாடி புட்டிசளில் | 1.80 |
| (2) மொத்த விற்பனை | 2.00 |
| (3) பிரத்தியேக விண்ணப்பம் | 2.25 |



② நிலைப்படுத்தப்பட்ட பால் 2,00,756 லிட்டர்
(தினசரி சராசரி விற்பனை)

| | |
|---|---|
| (1) கண்ணாடி புட்டிகளில் | 2.00 |
| (2) பாலிதீன் பைகளில் | 2.10 |
| (3) மொத்த விறபனை | 2 20 |
| (4) பிரத்தியேக விண்ணட்பம் | 2.45 |
| (5) தானியங்கி விற்பனை இயந்திரம் மூலம் விற்பனை | 1.90 (கார்டு வைத்திருப்பவர்கள்) |
| | 2.00 (காசுக்கு) |

# வாழையடி வாழை



வாழைச் சாகுபடிக்கென, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் கடந்த சில ஆண்டுகளாகச் சில ஆய்வுகள் நடைபெற்றன. அவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட திருந்திய முறைகள் அதற்கெனப் பரிந்துரைக்கப்படுகின்றன.

இடத்திற்கேற்றவாறு சிறந்த இரகங்களைத் தேர்ந்தெடுத்து, திருந்திய சாகுபடி முறைகளைக் கையாண்டு, நூற்புழுக்கள், பூசணம், நுண்ணுயிர் நோய்க் கிருமிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தினால் வாழை உற்பத்தி பன்மடங்கு பெருகும்.

**வெப்பநிலை**

தவறாது பருவ மழை பெய்யும் இடங்களில் இரண்டாயிரம் மீட்டர் உயரம் வரையுள்ள மலைச் சரிவுகளில், மானாவாரியாக வாழையைப் பயிரிடலாம். வருடம் முழுவதும் மண்ணில் ஈரமுள்ள ஆற்றுப் படுகைகளிலும் மானாவாரியாகப் பயிரிடலாம். ஏனைய இடங்களில் நீர்ப்பாசன வசதியுடன் பயிரிட வேண்டும்.

**மண் வளம்**

களர் நிலமும் களி மண் பூமியும் வாழைக்கேற்றதல்ல. நல்ல வடிகால் வசதியிருப்பின், நஞ்சை நிலங்களிலும் சிறந்த முறையில் வாழையைப் பயிரிடலாம். திருச்சி மாவட்டத்தில் நஞ்சை வாழைச் சாகுபடி பெரிய அளவில் செய்யப்படுகிறது.



**நடுவதற்கேற்ற கன்றுகள்**

நேர்த்தியான, நோய் இல்லாத வாழைக் கன்றுகளை நடுவதால் நிறைந்த மகசூல் பெறலாம். நோய்கள் தாக்கப்பட்ட மரத்திலிருந்தும், நூற்புழுக்கள் சேதமுள்ள தோட்டங்களிலிருந்தும் கன்றுகளைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட கன்றுகளில் கிழங்கின் மேல் தோலைச் சீவி நூற்புழுக்கொல்லிக் குருணைகளைத் தூவி நடுவதால் வாழையை நூற்புழுக்களின் சேதத்திலிருந்து தவிர்க்கலாமெனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்ட ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

இதனால், வாழையின் வேர் வளர்ச்சியும் அதிகமாகும். வாழைக்கு இடும் உரங்களனைத்தும் உட்கொள்ளப் பட்டுநிறைந்த வளர்ச்சியும் அதிகமாகும். நிறைந்த மகசூல் கொடுப்பதற்கும் இதனால் வாய்ப்பு ஏற்படுகின்றது.

பச்சை வாழை, ரொபஸ்டா, போன்ற வாழை இரகங்களுக்குக் கன்றுகளின் எடை 1.5 - 2.0 கிலோ இருத்தல் அவசியம். ஒரே அளவான பருமனுள்ள கன்றுகளை நடுவதால், வாழை சீராக வளரும். மறுதாம்புப் பயிரின் வளர்ச்சியும் சீராக அமையும். நேந்திரன் வாழைக்குச் சற்று சிறிய கன்றுகளே உகந்தவை.

**இடைவெளி**

வாழை இரகம், நிலச் சமன், வெப்பநிலை, பயிரிடும் முறை ஆகியவற்றைப் பொறுத்து, கன்றுக்குக் கன்று இடையே விடப்படும் இடைவெளி மாறுபடும்.

பொதுவாக ஒரு எக்டரில் 2150 முதல் 3550 கன்றுகள் வரை நடலாம். (ஒரு ஏக்கரில் 870 முதல் 1440) சில முறைகளில் எக்டருக்கு 4900 கன்றுகள் வரைகூட நடவு செய்யலாம். (ஒரு ஏக்கரில் 1960) கன்றுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து வாழையில் வளர்ச்சி அமைவதால் தகுந்த இடைவெளி அமைதல் மிகவும் முக்கியம். வாழையின் வளர்ச்சியைப் பொறுத்தும் நடும் இடைவெளி மாறுபடும். அதிக உயரம் வளரக் கூடிய இரகங்களுக்கு அதிக இடைவெளி இருத்தல் அவசியம்.

**நடும் பருவம்**

பருவ மழை பெய்யும் காலம், வியாபார நோக்கம், இதர பழங்களின் உற்பத்திக் காலம் ஆகியவைகளைப் பொறுத்து, வாழை நடும் காலம் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. அதிக மழை பெய்யும் இடங்களில், பருவ மழை குறைந்தபின் நடுவது நல்லது. உயர்ந்த மலைச் சரிவு

களில் ஏப்ரல்-மே மாதங்களில் நடலாம். நஞ்சை வாழைப் பயிரிட பூவன், ரஸ்தாளி, மொந்தன் இரகங்களுக்கு மாசிப்பட்டம்

## இரகங்களும் இடைவெளியும்

| இரகங்கள் | இடைவெளி (மீட்டர்) | | இடைவெளி (அடி) | | எண்ணிக்கை ஏக்கர் | எண்ணிக்கை எக்டர் |
|---|---|---|---|---|---|---|
| குள்ளப் பச்சை வாழை | 1.7 | 1.7 | 5.5 | 5.5 | 1440 | 3,550 |
| நேந்திரன், ரொபஸ்டா | 1.8 | 1.8 | 6.0 | 6.0 | 1210 | 3000 |
| பூவன், மொந்தன், ரஸ்தாளி | 2.2 | 2.2 | 7.0 | 7.0 | 870 | 2150 |

(பிப்ரவரி-மார்ச்) சிறந்தது. ஆனால், நேந்திரன், ரொபஸ்டா வகைகளை நஞ்சையில் நட சித்திரைப் பட்டம் (ஏப்ரல்-மே) சிறந்தது. ஆனால், காலம் தவறி நடுவதால் வாழையின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும். நேந்திரன் இரகத்தில் பாதிப்பு அதிகமாக ஏற்படும்.

ஆற்றுப் படுகைகளில் வாழை பயிரிட டிசம்பர்-ஜனவரி மாதங்கள் உகந்தவை.

மற்ற இடங்களில் ஜூன் முதல் நவம்பர் வரையிலும் வாழைச் சாகுபடி செய்யப்படுகிறது.

### உரமிடுதல்

வாழை மண்ணிலிருந்து அதிக அளவில் சத்துப் பொருட்களை ஈர்த்துக் கொள்வதால் உரிய காலத்தில் சமச்சீர் உரமிடுவது மிகவும் அவசியம். மண்ணின் வளத்தினையும், இரகங்களையும் பொறுத்து உரத் தேவையும் மாறுபடும். பச்சை வாழை இரகங்கள் இடும் உரத்திற்குத் தக்கவாறு மகசூல், அளிக்க வல்லவை. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் நடைபெற்ற ஆராய்ச்சியின் அடிப்படையில் வாழைக்குத் தேவையான உர அளவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

## மரம் ஒன்றுக்கு

| உரம் | கன்று நட்ட மூன்றாவது மாதத்தில் | கன்று நட்ட ஐந்தாவது மாதத்தில் |
|---|---|---|
| தொழு உரம் | 12 கிலோ | 12 கிலோ |
| அம்மோனியம் சல்பேட் | 300 கிராம் | 150 கிராம் |
| சூப்பர் பாஸ்பேட் | 200 கிராம் | — |
| மியூரியேட் ஆப் பொட்டாஷ் | 250 கிராம் | 250 கிராம் |
| பிண்ணாக்கு | 100 கிராம் | 100 கிராம் |

### நீர்ப்பாய்ச்சுதல்

வெப்ப நிலை, மண்ணின் தன்மை, பயிரிடப்படும் இரகம் ஆகியவற்றினைப் பொறுத்து, வாழையின் நீர்த் தேவையும் மாறுபடும். மணற்பாங்கான நிலங்களிலும், கோடையிலும் நான்கு நாட்களுக்கு ஒரு முறையும், ஏனைய பருவங்களில் வாரம் ஒரு முறையும் நீர் பாய்ச்சவேண்டும். வாழையின் சீரான வளர்ச்சிக்கு நீர்ப் பாசனம் இன்றியமையாததாகும். நீர்ப்பற்றாக் குறையிருப்பின், இதன் வளர்ச்சி ஈடு செய்ய இயலாதவாறு தடைப்படும். ஆகவே, அடிக்கடி நீர்ப் பாய்ச்சுதல் அவசியம்.

### காய் நுனிப் பூப்பாகங்கள்

ரொபஸ்டா வாழையில் குலைகள் வெளிவந்த 8 முதல் 12 நாட்களில் பிஞ்சுக் காய்களின் நுனியில் இருக்கும் பூப்பாகங்களை நீக்குவதானால் காய் நுனிக் கருகல் நோய் வராது தடுக்கலாம். ரொபஸ்டா இரகத்திலும் இம்முறையில் காய் நுனி நோய் வராமல் தடுக்கலாம். இவ்வாறு செய்வதால், பூசணக் கொல்லி மருந்திற்காகும் செலவு குறையும். காய்களும் கவர்ச்சிகரமாக இருக்கும்.



வாழை ஏற்றுமதியின்போது நுனிகள் அகற்றப்படாத காய்களை அட்டைப் பெட்டிகளில் அடுக்கும்பொழுது சேதமுண்டா



## பசுந்தீவனங்களை அறுவடை செய்யத் தகுந்த தருணம்

பசுந்தீவனங்களைச் சத்துக்கள் மிகுந்தும் அளவும் அதிகரிக்க குறிப்பிட்ட நாட்களில் அறுவடை செய்வது முக்கியம். குறிப்பிட்ட நாட்களில் அறுவடை செய்வதால் புரதம் மாவுச்சத்துக்கள் தாது உப்புக்கள் மிகுந்தும், ஜீரணத்தைக் குறைக்கக்கூடிய நார் சத்துப் பொருட்கள் லிக்னின், போன்ற பொருட்கள் குறைந்த நிலையில் இருக்கும்போது அறுவடை செய்யவேண்டும். மேலும் ஜீரணிக்கக்கூடிய திடப்பொருள் அதிக அளவில் இருக்கும்.

கீழ்க்கண்ட புற்களை முதல் அறுவடைக்குப் பிறகு மறு அறுவடை செய்ய வேண்டிய நாட்கள்:

1. கம்பு நேப்பியர் புல் 45-50 நாட்கள்
2. கினியா புல் 45 நாட்கள்
3. தட்டைப் பயிர் 55 நாட்கள்
4. குதிரைமசால் 20-25 நாட்கள்
5. மக்காச் சோளப் பயிர் 70 நாட்கள்

## கேட்டித் தீவனத்திற்குப் பதில் பசுமைத் தீவனம்

கால்நடைகளுக்குக் கெட்டிச்சத்து ஊட்ட தீவனமின்றி பசுந்தீவனம் மூலமாகப் பால் பெறலாம்.

8 முதல் 10 லிட்டர் நாள் ஒன்றுக்குப் பால் தொடுக்கும் மாட்டிற்கு வேண்டிய தீவனங்கள்:

கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் 50 கிலோ
குதிரைமசாலா 6 கிலோ
அரிசித் தவிடு 3 கிலோ
தாது உப்பு 30 கிராம்
அளித்தலே போதுமானது ஆகும்.

ஒரு லிட்டர் பால் உற்பத்திச் செலவு ரூ. 1.15 காசு மட்டுமே

பசுந்தீவனம் அளிப்பதால் மாடுகள் சீக்கிரத்தில் பலனுக்கு வந்து கர்ப்பமடைகின்றன.



ஒரு கன்று பிறந்து மறு கன்று பிறப்பதற்கு இடைவெளி சராசரியாக 415 நாட்கள் மட்டுமே ஆகின்றன.

''பசுந்தீவனம் அளித்துப் பால் உற்பத்தியைப் பெருக்கிடுவீர்!''

—டாக்டர்
சி. ஏ. கோபாலகிருஷ்ணன்.
பேராசிரியர்—தலைவர்,
கால்நடை பராமரிப்புத் துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3.

கிறது. இந்த முறை ரொபஸ்டா வாழைக்கு மட்டும் ஏற்றது. மற்ற வாழை இரகங்களுக்கு உகந்ததல்ல.

**மறுதாம்புப் பயிர்**

பூவன், மொந்தன் போன்ற இரகங்களை மறுதாம்புப் பயிருக்கு விடலாம். ஆனால், நேந்திரன், குள்ள பச்சை வாழை இரகங்கள் மாறுதாம்புப் பயிரிட உகந்தவையல்ல. மறுதாம்புப் பயிர் சீராக அமைந்திட பக்கக் கன்றுகளை நன்கு தேர்ந்தெடுத்து தகுந்த காலத்தில் ஒதுக்கிட வேண்டும். குறிப்பாக நஞ்சை வாழைச் சாகுபடியில் சீராக மறுதாம்புப் பயிரிட, தாய் மரம் குலை தள்ளிய பின் மரத்திற்கு மிக அருகாமையில் உள்ள ஈட்டி இலைக் கன்றுகளில் ஒன்றினை ஒதுக்கிடவேண்டும். ஒரு நிலத்தில் பயிரிடப்படும் எல்லா மரத்திலும் ஒரே நாளில் கன்றுகளை ஒதுக்குவதால் மறுதாம்பின் வளர்ச்சி சீராக அமையும்.

ஆகவே, எல்லா மரத்திலும் ஒதுக்குவதற்கேற்ற கன்றுகள் வரும் வரையில் இதரக் கன்றுகளை முறுக்கி வைத்துப் பின்னர் எல்லாக் கன்றுகளையும் குலை தள்ளிய 45 நாட்களுக்குள் தரை மட்டத்திலிருந்து ஒரு அடிவிட்டு வெட்டிவிட வேண்டும்.

தேவையற்ற இதரக் கன்றுகளை அகற்ற வேண்டும்.

தார்களை வெட்டியபின் தாய் மரத்தை உடனே வெட்டிவிடாமல் சிறிது சிறிதாகக் காய்வதற்கு ஏற்றபடி வெட்டிவிடுதல் வேண்டும். இவ்வாறு செய்வதால் தாய் மரத்தில் எஞ்சியுள்ள சத்து பக்கக் கன்றுகளுக்குக் கிடைத்து கன்றுகளின் வளர்ச்சி நன்கு அமையும். ரொபஸ்டா வாழையில் தாய் மர அறுவடைக்குப் பின்னர் நூற்புழுத் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேண்டும். இது மிக அவசியம். அப்படிச் செய்தால்தான் ரொபஸ்டா வாழையில் மறுதாம்புப் பயிர் நன்கு அமையும்; அதனால் அதிக மகசூல் பெறலாம். வாழைச் சாகுபடியில் வாழையடி வாழையாய் வருமுறைகளைத் தவிர்த்து, மேற்கண்ட முறைகளைப் பின்பற்றுவோமானால், வாழை வளம் பெறும் என்பது திண்ணம்

தகவல்: சி. மு. பக்தவத்சலு,
இரா. செ. அழகிய மணவாளன்
எஸ். சத்தியமூர்த்தி,
தோட்டக்கலைத் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

# படமும் செய்தியும்



இந்தியக் குடியரசுத் தலைவர் திரு என். சஞ்சீவி ரெட்டி அவர்களை, மேதகு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களும், முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்களும் ஏனைய அமைச்சர்களும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 11.4.79 அன்று வரவேற்றனர்.



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (1976-77, 1977-78 ஆண்டுகளுக்குரிய) டிவிடண்ட் தொகையான ரூ.16.98 லட்சத்துக்குரிய காசோலையை, மேற்படி நிறுவனத்தின் தலைவர் திரு ஏ.பி. அனந்த-கிருஷ்ணன், முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களிடம் வழங்குகிறார்.



11.4.79 அன்று, மேற்கு வங்க உணவமைச்சர் திரு. சுதின் குமார் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு உணவமைச்சர் திரு. ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை, தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.





வெள்ளி விழா
கைத்தறிக் கண்காட்சி 1979







மத்திய அரசின் கப்பல் போக்குவரத்துத்துறை ராஜாங்க அமைச்சர் திரு சந்த்ராம் அவர்கள் மான்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 31.3.79 அன்று சந்தித்தார்கள். மான்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் உடனுள்ளார்.

அனைத்துநாட்டு நிதிக்குழுவின் நிர்வாகத் துணைத் தலைவர் திரு. மோயென் ஏ குரேஷி ( Moven A Quareshi )யும் அவரது குழுவினரும் மான்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்களை தலைமைச் செயலகத்தில் 28.3.79 அன்று சந்தித்தார்கள்.





மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் ராஜாஜி சாலையிலுள்ள சுரங்கப் பாதையை 28.3.79 அன்று திறந்து வைத்தார்கள். விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ்.ராகவானந்தம் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ்.ராகவானந்தம் அவர்கள் சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரிக்கு அருகிலுள்ள சுரங்கப் பாதையை 28.3.79 அன்று திறந்து வைத்தார்கள். விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் கலந்து கொண்டார்கள்.



சென்னை அச்சகத் தொழில்நுட்ப நிறுவனத்தின் பொன்விழாவை யொட்டி நிறுவப்பட்ட நினைவுக் கல்லினை மாண்புமிகு கல்வி-யமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் 29.3.79 அன்று திறந்து வைத்தார்கள்.



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள் (17-3-79 முதல் 31-3-79 முடிய)

**17—3—79**

சென்னை நகரில் 5 ஆயிரத்து 983 சைக்கிள் ரிக்ஷாக்கள் உள்ளன. இனிமேல் சைக்கிள் ரிக்ஷாக்களுக்குப் புதிய உரிமம் (லைசென்ஸ்) வழங்குவதை நிறுத்த அரசு முடிவு செய்துள்ளது.

சைக்கிள் ரிக்ஷாக்களின் உரிமங்களை, ஓட்டுபவர்களுக்கே வழங்கவும் அரசு முடிவெடுத்துள்ளது.

ஓட்டுபவர்களுக்கே சைக்கிள் ரிக்ஷாக்களைச் சொந்தமாக்கப் புதிய சட்டம் ஒன்றை அரசு கொண்டுவரும் என்று மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் சி. பொன்னையன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

**18—3—79**

பத்துத் தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றும் தொழிற் சாலைகளிலும் போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டுவருகிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

**19—3—79**

நூலகச் சீரமைப்புக் குழு அனைத்து நூலகங்களையும் அரசே தனது நேரடி மேற்பார்வையில் நடத்த வேண்டும் என்றும், நூலக ஆணைக்குழுக்கள் நடத்தத் தேவையில்லை என்றும் பரிந்துரைத்தது. இதனை அரசு ஆராய்ந்து கொள்கை அளவில் நூலக ஆணைக் குழு சில மாற்றங்களுடன், நூலகப் பணியைத் தொடர்ந்து நடத்தலாம் என அரசு கருதுகிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

**20—3—79**

பொய்யான, அவதூறான, கீழ்த்தரமான, தவறான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்க மசோதா ஒன்றைத் தயாரித்து, தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது என்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

சென்னை நகரின் சாக்கடைகளை இயந்திரங்கள் மூலம் சுத்தப்படுத்தும் திட்டம் இன்னும் இரண்டு ஆண்டுகளில் நிறைவேறும் என்றும், இந்தப்பணிக்காக 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன இயந்திரங்கள் வெளிநாடுகளில் இருந்து வாங்கப்பட இருக்கின்றன என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் எஸ். இராகவானந்தம் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

**21—3—79**

சென்னை நகரில் இராணுவத்துக்குச் சொந்தமான ஒரு பகுதி நிலம், பொருட்காட்சி நடத்தும் இடத்தில் உள்ளது. அதை மாநில அரசுக்குக் கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம். அந்த இடம் கிடைத்தவுடன் நிரந்தரப் பொருட்காட்சிக்கு, அந்த இடத்தில் நிரந்தரக் கட்டடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

**22—3—79**

சிதம்பரம் அருகே உள்ள பிச்சாவரத்தைச் சுற்றுலா மையமாக மேம்படுத்த 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திடம் கடன் வாங்கி, அதை வேறு காரியத்திற்குப் பயன்படுத்தும் தொழில் நிறுவனங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் திரு க. இராசா முகமது அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

**23—3—79**

தனியார் துறையில் காடுகள் இருக்கக் கூடாது என்பதற்குச் சட்டம் கொண்டு வருவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் மேலவையில் தெரிவித்தார்.

**24—3—79**

கோவில் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்கள் அரசுக்குச்செலுத்த வேண்டிய தொகை ரூ. 20 கோடி அளவுக்கு இருக்கிறது. இந்தப் பாக்கித் தொகை முழுவதும் வசூலிக்கப்படும் நாளில் இருந்து ஒரு மாதக் காலத்துக்குள் ஆலய ஊழியர்கள் அரசு ஊழியர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தெரிவித்துள்ளார்.

25—3—79

விவசாயக் கடன்களுக்கு ரிசர்வ் வங்கியின் வட்டி குறைக்கப்பட்டதை அடுத்து, கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு வழங்கும் கடனுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட்டுள்ளது என்றும், ரூபாய் 47 இலட்சம் செலவில் அறிஞர் அண்ணா நகரில் கூட்டுறவு மையம் அமைக்கப்பட்டு வருகிறது என்றும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

26—3—79

இலங்கை, பர்மா போன்ற நாடுகளிலிருந்து வரும் அகதிகளிடம் அரசு உதவிகள் பெற்றுத் தருவதாகக் கூறி சில இடைத்தரகர்கள் மோசடி செய்வதாகப் புகார்கள் வந்தன. இடைத்தரகர்களைத் தடுக்கத் தனி போலீஸ் படை அமைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்கப்பட்டது. மாநில போலீஸ் மூலமே நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசு அறிவித்துள்ளது என்று மாண்புமிகு சமூகநல அமைச்சர் செல்வி. பி. டி. சரசுவதி அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

சென்னையில் 180 கிலோ மீட்டர் கப்பல் பழுதுபார்க்கும் கூடம் 6 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் திட்டம் மத்திய அரசின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

27—3—79

பள்ளிகளில் மாணவ, மாணவிகளைச் சேர்க்கும்போது, சேர்க்கை மனுக்களில் சாதிப் பெயர் குறிக்குமாறு எவரையும் வற்புறுத்தக்கூடாது என்று தலைமை ஆசிரியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

28—3—79

தமிழ்நாட்டில் உழவர் செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் மூலம் 630 மையங்களில் முதியோர் கல்வி கற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

29—3—79

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் மூலம் மேலும் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெற அரசு ஏற்பாடு செய்துள்ளது என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

## நெசவுத்தொழில்

- நாட்டில் மிகப் பெரிய சிறு தொழில் கைத்தறி நெசவுத் தொழில்!
- நாட்டில் உற்பத்தியாகும் மொத்த பருத்தித் துணிகளில் மூன்றில் ஒரு பகுதியை கைத்தறித் துறை உற்பத்தி செய்கிறது!
- விவசாயத்திற்கு அடுத்தபடியாக பெருமளவில் கைத்தறித் துறை வேலைவாய்ப்புகளைக் கொடுக்கின்றது. ஆறில் ஒருவர் கைத்தறி நெசவில் ஈடுபட்டுள்ளனர்.
- நெசவுத் தொழிலில் பெரும்பாலோர் பெண்களே. குறிப்பாக வடகிழக்கு இந்தியாவில் நெசவுத் தொழில் வீடெங்கும் நடைபெறும் தொழிலாகும்.
- நாட்டில் பட்டாடைகள் யாவும் கைத்தறியில் ஆனவை; விலையுயர்ந்த பட்டு, பருத்தி ஆடைகளும் பொருட்களும் கைத்தறியில் உருவானவைகள் அல்லது கைவினைஞர்களால் செய்யப்பட்டவை.

30—3—79

14 வயது வரை படிக்காமலிருந்தவர்கள், தானாகப் படித்து எவர் வேண்டுமானாலும் எட்டாம் வகுப்புக்குத் தேர்வு எழுதலாம். 1979 டிசம்பர் முதல் ஒவ்வொரு ஆண்டும் தேர்வு நடைபெறும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

31—3—79

இரண்டு இலட்சம் கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே செயல்பட்டுவரும் கூட்டுறவுச் சங்கங்களை விரிவுபடுத்தியும், புதிய கூட்டுறவுச் சங்கங்களிலும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவதன் மூலமும் இவர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரப்படுவர் என்று கைத்தறித்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

மலைவாழ் மக்களின் நலனுக்குத் தனி அதிகாரிகளை நியமிக்கவும், மலைவாழ் மக்கள் முன்னேற்றத்துக்காக, மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கவும் அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பெ. சவுந்தரபாடியன் அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.



மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்
திரு ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களின் உடலின் மீது,
மாண்பு மிகு முதல்வர் அவர்கள் 10-4-79 அன்று,
மலர் வளையம் வைத்து, விமான நிலையத்தில்




அரசியல் மேதை டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு அரசு எடுத்த விழா. (14-4-79)






ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.